ஆதவன்
AATHAVAN

நல்ல துவக்கம்

நல்ல துவக்கம் பாதி வெற்றி என்பது பழமொழி பரநலத்தை முன்னணியிலும் சுயநலத்தைப் பின்னணியிலும் வைப்பது நல்ல துவக்கம் கடமை முன்னணியிலும் களியாட்டம் பின்னணியிலும் இருத்தல் வேண்டும். இதனால் தவறுதல் உண்டாக இடமில்லை. தூய எண்ணம் பரந்த நோக்கம் சாந்த நிலை களங்கமற்ற பான்மை ஆகியவைகள் நல்ல துவக்கத்திற்கு ஏதுவாகும்.

ஒளி –01 ஜனவரி - 20.2012, இலவச வெளியீடு பக்கங்கள் 24 கதிர் – 01

13வது அரசியல் திருத்தத்திற்கு அப்பால் தீர்வு அமைச்சர் கிருஷ்ணாவிடம் ஜனாதிபதி உறுதி

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று இலங்கைத் தமிழர்களுக்கு தீர்வு வழங்க தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தன்னிடம் உறுதியளித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த 16 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்த அமைச்சர் கிருஷ்ணா கடந்த 16 ஆம் திகதி காலை ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்து தமிழர்களுக்கான தீர்வு விடயம் உட்பட பல விடயங்கள் பற்றி கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி அந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இதேவேளை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் அமைச்சர் கிருஷ்ணா 16 ஆம் திகதி மாலை சந்தித்துப் பேசினார். தீர்வு விடயத்தில் இலங்கை அரசிடம் தமக்கு நம்பிக்கை இழந்து விட்டதாக கூறிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் இச் சந்திப்பின் போது வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டம் மற்றும் வடக்குப் புகையிரதப் பாதை புனரமைப்பு உட்பட பல உதவிகள் சம்பந்தமான 5 புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளன. அமைச்சர் எச். எம் கிருஷ்ணா கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி யாழ் மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தார்.





வடக்கு கிழக்கு இணைப்பு காணி பொலிஸ் அதிகாரம் என்பன உள்ளடக்கப்படாத தீர்வை ஏற்கமாட்டோம் மட்டக்களப்பில் மாவை எம்.பி. சூளுரை.



வடக்குகிழக்கு மாகாணங்களை இணைத்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் கொண்ட தீர்வையே நாம் கோரி வருகின்றோம். இறுதியாக நடைபெற்ற பேச்சுவார்த் தையின்போது இதை அரசுக்கு தெளிவு படுத்தியுள்ளோம். ஆனால் இதற்கு அரச தரப்பினர் தயாராக இல்லை.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்ட எம்.பி. யுமான மாவை சேனாதிராசா மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் பேசும் போது சூளுரைத்தார். தமிழ் மக்களின் அபிலாசைகள் உள்ளடக்கப் படாத எந்த ஒரு தீர்வையும் நாம் ஏற்கப் போவதில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

கட்சியின் அடுத்த மாகாநாட்டை மட்டக்களப்பில் நடத்துவதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஆராயுமுகமாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் மட்டக்களப்பு அமெரிக்கன் இலங்கை மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய மாவை எம்.பி மேலும் கூறியதாவது.

2001 – 2002 ஆண்டு தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சி அதிலிருந்து வெளியேறியது. அவ்வேளை விடுதலைப்புலிகள் உட்பட சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்ட வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகவே அத் தேர்தல்களில் நாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்டோம். முப்பது வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இலங்கைத் தமிழரசுக்கட்சி தேர்தலில் போட்டியிட்டது.

அதன் பின்னர் அனைத்துப் பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டது.

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு தீர்வும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஊடாக வழங்கப்படக் கூடாது என்று ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்து அதன்படி செயற்படுகின்றது. படித்து பட்டம் பெற்றவர்களே மக்களை குழப்ப முற்படுகின்றார்கள். சிவில் சமூகம் என்ற போர்வையில் அண்மைக்காலத்தில் பத்திரிகை அறிக்கையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடனான பேச்சுவார்த்தையில் நெகிழ்வுத் தன்மையை வெளிப் படுத்துவதாக கூறியிருந்தார்கள். ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளை விட அடம்பிடிக்கின்றார்கள் என்று கூறுகிறார். இதில் மக்கள்தான் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஒருபோதும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக எந்தவொரு தீர்வையும் ஏற்கமாட்டோம். ஏற்க முடியாத தீர்வொன்றை எவரும் எம்மீது திணிக்க முடியாது.

எமது இனத்தின் விடுதலைக்காக அன்று ஆயுதம் ஏந்தி போராடியவர்கள் இன்று பதவிகளைப் பெற்றுக் கொண்டு எமது கட்சியையும் தலைவர் சம்பந்தன்

8ம் பக்கம் பார்க்க.....



வடக்கு புகையிரதப் பாதை புனரமைப்பு 50 ஆயிரம் வீடமைப்பு திட்டம் உட்பட பல நிவாரணப் பணிகள் இந்திய அரசின் உதவியுடன் வடக்கில் மேற் கொள்ளப் படுகின்றன. யாழ் புகையிரத நிலையம் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதை படத்தில் காணலாம்.

விவேகானந்தர் சிலை விசமிகளால் சேதம்

மட்டக்களப்பு - ஆரையம்பதி எல்லை வீதியில் நிறுவப்பட்டிருந்த சுவாமி விவேனாந்தரின் சிலை சில தினங்களுக்கு முன்னர் இரவோடு இரவாக சில விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயலை கண்டித்து தமிழ் முஸ்லீம் அரசியல்வாதிகளும் மட்டக்களப்பு பல் சமய ஒன்றியமும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆரையம் பதியைச்சேர்ந்த மாணவர்கள் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்பினர் இச்செயலை கண்டித்து கறுப்புப்பட்டி போராட்டத்திலும் ஈடுபட்டனர்.














கடந்த 18 12 2010 அன்று மொன்றியல் நகரில் இடம்பெற்ற கல்கிதாசன் எஸ்.பி கனெக்ஸ் அவர்களின் **கல்கிதாசன் கவிதைகள்** நூல்வெளியீட்டு விழா சமீபத்தில் மொன்றியல் நகரில் இடம்பெற்றபோது சிறீனோ சிறீ சிறீசு நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதையும் திருமதி. ஈஸ்வரி இராஜச்சந்திரா நல்லுரை வழங்குவதையும் ஆய்வுரை செய்த எழுத்தாளர் கே.பி.லிங்கம், சிறப்புரை ஆற்றிய கவிஞர் அஜந்தா ஞானமுத்து (சக்திசாந்தன்) ஆகியோரையும் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்ட பாபு வசந்தகுமார் அவர்களையும் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் ஏற்புரை வழங்கிய கல்கிதாசன் எஸ்.பி.கனெக்ஸ் அவர்களையும் படங்களில் காணலாம்.

ஆதவன்

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
-திருக்குறல்

விடியலை நோக்கி......

ஆதவன் உதிப்பது விடியலின் அறிகு.றி. அந்த வகையில் எமது "ஆதவன்" இலங்கை இந்தியா உட்பட இப்பிரபஞ்சம் எங்கும் பரந்து வாழ்கின்ற உலகத் தமிழர்களின் சமுக பொருளாதார கல்வி கலை இலக்கிய பண்பாட்டு விடியலை நோக்கி வெளிச்சம் பாய்ச்சுவது எமது குறிக்கோளாகும். இந்த இலக்கை நோக்கியதான எமது குறிக்கோள்களும் செயற்பாடுகளும் பின்வருமாறு அமையும்.

√ பொருளாதார ரீதியாக விளிம்பு நிலையில் வாழும் தமிழ் மக்களை பொருளாதார ரீதியாக கை தூக்கி விடல்.
√ உலக மயமாக்கல் நுகர்வுக் கலாசாரம், தகவல் தொழில் நுட்பத்தின் அதித வளர்ச்சி காரணமாக அருகிவரும் அல்லது அழிந்து வரும் பாரம்பரிய தமிழ் கலை இலக்கிய பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாத்து பிற்சந்ததிக்கு கொண்டு செல்லுதல்.
√ நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் தமிழ் மொழியை விஞ்ஞான ரீதியாக வளர்த்தெடுத்தல்.

ஆதவன் ஆரம்பித்துள்ள இந்த வேள்வி பலவிதமான தடைகளையும் தடங்கல்களையும் தாண்டிச் செல்ல வேண்டிய பாரிய பயணமாகும்.
உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் உறவுகளே !
இப்பாரிய பணியில் உங்கள் ஆகுதிகளைச் சொரியுங்கள்.
மகாகவி பாரதியார் வார்த்தையில் கூறுவதாயின்

நிதி மிகுந்தவை பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல்லருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்.
என்ற அன்பான வேண்டுகோளுடன் ஆக்கம் ஊக்கம் அன்பு அரவணைப்பு அனைத்தையும் நல்குவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் மற்றுமொரு கதிரில் சந்திப்போம்.

Address:
Athavan
70 – 365 Murray Ross Pkwy
North York Ont M3J 3T7
Toronto, Canada

416 998 2284
Office: 416 261 6841
Fax : 647 340 0329
Email: athavannews@gmail.com
Web: athavannews.com

தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்ற தந்திரோபாயம் தேடும் இலங்கை அரசு

தமிழ் மக்களை மீண்டுமொரு தடைவ எப்படி ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் ஏமாற்றப்பட வேண்டும். ஆனால் தாங்கள் ஏமாற்றுவதாக எவரும் உணரக் கூடாது என்பது தான் இலங்கை அரசுக்கு இன்றுள்ள தலையாய பிரச்சினை.

ஏமாற்றுவது இலங்கை அரசுக்கு புதிய கலையல்ல. 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தத்தைச் செய்து விட்டு ஏமாற்றியவர்கள், 1965ல் டட்லி செல்வா ஒப்பந்தத்தைச் செய்து விட்டு ஏமாற்றியவர்கள், 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைச் செய்து விட்டு ஏமாற்றியவர்கள் என்ற பழைய வரலாறுகள் நிறையவே உண்டு.

ஆயுதப் போர் முனைப்புப் பெற்றிருந்த வேளையிற் கூட அடிவாங்கியும் திருந்தாத சாதியாராக நடந்து கொண்டவர்கள் அவர்கள். அடி பலமாக விழுகின்ற போதெல்லாம் அதிகாரப் பகிர்வு, விட்டுக் கொடுப்பு, பேச்சுவார்த்தை என்று பிதற்றியும், அடியின் வலி குறைந்து போகும் நேரங்களில் சவால் விட்டுக் கொண்டிருந்தமையும் இலங்கை அரசியலிற் கறை படிந்த அத்தியாயங்கள்.

விழுந்த அடியைச் சுதாகரித்துக் கொள்வதற்காகப் பேச்சுவார்த்தை மேசைக்குப் புலிகளை அழைத்தவர்கள் சிங்கள அரசினர். உள்ளக ஆயத்தங்கள் - சுதாகரிப்புகள் நிறைவு பெறும் போது புலிகளை வெறுப்பேற்றி மீண்டும் போருக்குத் தூண்டியவர்கள் அவர்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுச்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்ச்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வளர்ச்சி என்பவற்றுக்குக் காரணகர்த்தாக்கள் இலங்கைச் சிங்கள அரசினர். ஆயுதப் போராட்டத்தின் எழுச்சி, வளர்ச்சி, என்பவற்றுக்கான காரணங்களையும் அவர்களே விதைத்தார்கள்.

விதைகள் விருட்சங்களான போது தந்திரங்கள் செய்து உலக நாடுகளில் கூழைக் கும்பிடு போட்டு உதவிப் பெற்று அவற்றை அழித்தார்கள்.

அறப் போராட்ட வடிவத்தை ஆயுதப் போராட்ட வடிவத்துக்கு மாற்றிய பெருமை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைச் சேரும். அதே போல் ஆயுதப் போராட்ட வடிவத்தை ராஜதந்திர போராட்ட வடிவத்துக்கு மாற்றித் தந்த பெருமை மகிந்தவைச் சாரும்.

2009 தமிழ் இனச்சங்காரத்தின் பின்னர்தான் உலக நாடுகளுக்குத் தமிழர் போராட்டத்தின் நியாயங்களும் சிங்கள அடக்கு முறையின் அநியாயங்களும் புரிய ஆரம்பித்தன.

நாங்கள் தாம்பாளத்தில் வைத்து தமிழர் உரிமைகளை கொடுத்து வாழ வைக்க காத்திருந்தோம். விடுதலைப் புலிகள் குழப்பி விட்டார்கள் என்பது போன்ற குதர்க்க நியாயங்கள் அற்றுப் போகவே உலக நாடுகளின் நெருக்கடிக்கு இலங்கை அரசு ஆளாகத் தொடங்கியது.

தப்பிச் செல்ல வேறு வழியற்ற நிலையில் '13வது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால்□ சென்று தமிழர்களின் துயரைத் தீர்ப்பேன் என்ற வார்த்தை மகிந்தரின் வாயிலிருந்து வந்தது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் நிர்ப்பந்தத்தால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புத் திருத்தமே 13வது திருத்தம் எனப்படுகிறது. இதன் கீழ்த்தான் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அரசு தாபிக்கப்பட்டது. காணி அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் இச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஆனால் ஏமாற்றுவதில் வல்ல இலங்கை அரசு அன்றைய சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு காணி, பொலிஸ் அதிகாரங்களை இருட்டடிப்புச் செய்தது. மாகாண அரசு என்று □சொல்லக் கூடாது□ மாகாண சபை என்றே சொல்லப்பட வேண்டும் என்றும் அழுத்தியது.

வடக்குக் கிழக்கு மாகாண அரசு ஒரு வருடத்திலேயே முறிவடைய இவையும் காரணங்களாயின. வடக்குக் கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய பகுதி மாகாண சபைகளைப் பொறுத்தமட்டில் அதிகாரம் யார் கையில் இருந்தாலும் ஒன்றுதான். அகப்பை தன்னவர் கையிலிருந்தால் அடிப்பந்தியென்ன நுனிப்பந்தியென்ன என்ற நிலை அவர்களுக்கு.

□13க்கும் மேலாக□ என்று மகிந்த சொன்னது வடக்கு கிழக்கு இணைப்புடன் கூடிய மாநிலம், காணி , பொலிஸ் அதிகாரங்களை முழுமையாகக் கொண்ட மாநில அரசு என்பவற்றுக்கும் கூடுதலான விடயம்.

ஏமாற்றும் எண்ணம் அரசின் மனதிலிருந்த போதும் சர்வதேச நெருக்கடி நிலைமை அதிகரித்த காரணத்தால் 2011 ஆரம்பத்தில் தீர்வுத் திட்டம் தொடர்பாக தமிழர் தரப்புடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கப்பட்ட தமிழ் தலைவர்களுக்கு மகிந்த அரசினால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பேச்சுவார்த்தை இரு வாரங்களுக்கொரு முறை நடைபெறும். ஓவ்வொரு சுற்றுப் பேச்சின் முடிவிலும் அடுத்தச் சுற்றுக்கான திகதி தீர்மானித்து அறிவிக்கப்படும்.

தாராளமனதுடன் அரசு செயல்பட ஆயத்தமாக இருப்பதால் பேச்சுவார்த்தையில் எட்டப்படுகின்ற விடயங்கள் சம்பந்தமான தகவல்கள் வெளியில் கசியக் கூடாது. அவ்வாறு கசிய நேரிடின் சிங்களத் தீவிரவாத தரப்பிலிருந்து முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்படலாம் எனவே பேச்சுவார்த்தை சம்பந்தமான இரகசியத்தை இரு சாராரும் பேணல் வேண்டும்.

ஓவ்வொரு சுற்றுப் பேச்சின் போதும் முதல் அரைவாசிப் பகுதி தமிழ் மக்களின் உடனடி தேவைகள் சம்பந்தமாகவும் இரண்டாவது அரைப்பகுதி தீர்வுத் திட்டம் சம்பந்தமாகவும் அமைய வேண்டும். தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினை சம்பந்தமான விடயங்களில் உடன் நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற அரசு தரப்பால் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4ம் பக்கம் பார்க்க...

தமிழ் மக்களை....
இவற்றினடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சின் போது தமிழர்கள் படும் துன்பங்கள் பற்றி உடனடித் தீர்வுகள் பல எட்டப்பட்டிருந்தன. சிறையில் வாழும் தமிழ் இளைஞர்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படாதோரை குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் வழக்குத் தாக்கல் செய்ய முடியவில்லையெனில் விடுதலை செய்தல், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இளைஞர் விடயத்தில் வழக்குகளை விரைவாக விசாரித்து முடிவுகளை எட்டல், முகாம்களிலும் வேறு இடங்களிலும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் பெயர் விபரங்களை பகிரங்கப்படுத்தல் போன்ற முடிவுகள் பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்டிருந்தன.

ஆனால் ஏதோவொரு சாக்குப்போக்குச் சொல்லி ஒரு முடிவைத்தானும் அரசு நடைமுறைப்படுத்துவதில் அக்கறைக் கொள்ளவில்லை.

உள்;ராட்சி சபை தேர்தல் காலத்தின் போது தேர்தல் அலுவல்களில் ஈடுபட வேண்டுமென்று பொறுத்தமற்ற காரணத்தைக் கூறி பேச்சுவார்த்தை அட்டவணையில் அரசு சிதைவை ஏற்படுத்தியது. திகதிகள் மாற்றம் பெற்றன.

இவற்றுக்கும் மேலாக விரைவில் முடிவுகள் எட்டப்படுமென ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை ஒரு வருடத்தை எட்டிய நிலையில், காணி அதிகாரம் தரப்பட மாட்டாது, பொலிஸ் அதிகாரம் என்ற பேச்சுக்கே இடமில்லை, வடக்குக்கிழக்கு இணைப்பு என்ற வார்த்தையே ஆகாது என்பன போன்ற குதர்க்கத்தனமான அரசின் பேச்சினால் தேக்க நிலையை அடைந்து விடுமோ என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இரகசியங்களை காப்பாற்றுங்கள் என்றவர்களே அதனைக் கை விட்டார்கள். 13வது திருத்தச் சட்டத்துக்கும் மேலாக என்றவர்கள் 13வது திருத்தச் சட்டத்தின் அளவுக்கு வரவே பின்வாங்குகிறார்கள். தமிழர்கள் கேட்பதைக் கொடுத்தால் தங்கள் தொகுதிகளுக்கே திரும்பிச் செல்லமுடியாது என்று பிதற்றுகிறார்கள்.

இது இவ்வாறிருக்க தமிழர் தரப்பில் பேச்சுவார்த்தையின் போக்கு விழிப்புடன் அவதானிக்கப்படும் ஒன்றாகவே இருந்து வருகிறது. தமிழர்களைப் பொறுத்தமட்டில் வாழ்வா சாவா என்ற நிலையைத் தீர்மானிக்கும் ஆற்றல் பேச்சுவார்த்தைக்கு உள்ளதாக உணரப்படுகிறது.

தொடர்ந்தும் சிங்கள தரப்பால் ஏமாற்றப்பட்டு வந்தவர்கள் அவர்கள். சிங்கள அரசால் நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு ஏமாற்றமும் தமிழர்களைப் பொறுத்தமட்டில் கொள்கைப் பிடிப்புக்கான படிக்கட்டுகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதை எவரும் நிராகரித்து விடமுடியாது.

ஐக்கிய இலங்கைக்குள் வாழலாம் எனக் கனவு கண்டவர்கள் 10 இலட்சம் தமிழர்களை இலங்கை அரசு நாடற்றவர்களாக்கிய போது தமிழரசுக் கட்சியை தோற்றுவித்தார்கள். தனிச் சிங்களச் சட்டம் அமுலான போது வடக்கு கிழக்கு தமிழர்களுடைய பிரதேசம் என்பதை பண்டா செல்வா ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்தார்கள். அவ்வொப்பந்தம் பின்னாளிற் கிழித்தெறியப்பட்ட போதிலும் வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசமென உறுதி செய்தமை தமிழரின் அரசியல் சாணக்கிய மாகவும் ஒப்பந்தத்தை கிழித்தமை சிங்கள அரசின் அயோக்கிய தானமாகவும் அடையாளங் காணப்பட்டிருந்தன.

1972 குடியரசு யாப்பை தமிழர்களின் அபிலாசைகளைப் புறந்தள்ளி சிங்கள அரசு அமுலுக்குக் கொண்டுவந்த பின்னர்தான் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டனர். அப்போதும் கூட விட்டுக் கொடுப்புகளுக்கு ஆயத்தமாகவே இருந்தனர்.

இரண்டாவது குடியரசு யாப்பிலும் தமிழர்கள் ஏமாற்றப்படவே ஆயுதமெடுத்த இளைஞர்களின் பின்னால் மக்கள் அணி திரண்டனர். தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறி பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பாக மாறி ஜனநாயக வழியில் போராளிகளின் இலட்சியத்துக்கு குந்தகம் வராத வகையில் மக்களை ஒற்றுமைப் படுத்தி நெறிப்படுத்தினார்கள்.

2009 அனர்த்தத்தின் பின் இலங்கை அரசு எக்காளமிட்டது. தமிழர்களின் எண்ணங்கள் சிதைந்தன, அவர்களின் இலட்சியங்கள் அழிந்தன என்று கொக்கரித்தது.

மாறாக உயிர்களை காவு கொடுத்து உடைமைகளைப் பறிகொடுத்து நிர்க்கதியாக நின்ற போதிலும் தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றில் விடாபிடியாக வாக்களித்து உள்;ராட்சித் தேர்தலில் வடகிழக்கின் ஒரே பெருஞ் சக்தியாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உயர்த்திப் பிடித்தார்கள் உள்;ர் தமிழர்கள்.

ராஜதந்திர போரில் இலங்கை அரசை செயலிழக்க வைத்து தமிழர் அவலங்களை ஆயுதமாக்கி சர்வதேச அரசுகளின் சரியான பார்வையை தூக்கி நிறுத்தினார்கள் புலம்பெயர் தமிழர்கள்.

போராளிகளின் ஆயுதப் போரை விடப் புத்திஜீவிகளின் ராஜதந்திர போர் இலங்கை அரசுக்கு சர்வதேசத்தில் சிக்கலைத் தரத் தொடங்கியுள்ளது.

தமிழர் போராட்டம் உலகம் தழுவிய போராட்டமாக வடிவெடுத்துள்ளது.

இதனை வெற்றிகொள்ளலாம் என்ற நப்பாசையுடன் இலங்கை அரசு தமிழ் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை தொடங்கியிருக்கிறது.

பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தினால் தமிழர்கள் பலம் பெறுவார்கள், பேச்சுவார்த்தையைத் தானாகவே உதறிவிட்டால் தாம் சர்வதேச அரங்கில் தோற்றுபோய்விடலாம் என்ற குழப்பநிலை அரசுக்கு.

இதற்குள்ள ஒரே வழி தமிழர் தரப்பு தாமாகவே பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்ளும் படியாக நடந்து கொள்வது, அவ்வாறு நிகழ்ந்தால் அரசு தப்பிப்பிழைக்கும்: தமிழர் தலையிடி அற்றுப்போகும் என்பது அரசின் நம்பிக்கை.

ஆனால் தமிழர்தரப்போ பேச்சுவார்த்தையை அரசு வேண்டுமானால் முறித்துக்கொள்ளட்டும்: தாங்களாக முறித்துக்கொள்ளப் போவதில்லை என்பதில் முனைப்பாக நிக்கிறது. இதுதான் இன்று அவர்களுடைய பலம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் டிசம்பர் 30ந் திகதி திருக்கோணமலையில் இடம்பெற்ற போது இதுபற்றியே தீவிரமாக ஆராயப்பட்டிருக்கிறது.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றின் அடிப்படையிலேயே பேச்சுகள் இடம்பெற வேண்டும். வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், காணி பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய ஆட்சியமைப்பு என்பவற்றின் இம்மியளவிலேனும் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தைப்பொங்கல் கழிந்ததும் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடமுள்ள ஆயுதம் உள்;ர் தமிழர்களின் உறுதியும் புலம்பெயர் தமிழர்களின் பலமும் நியாயத்தின் ஆதிக்கமும் தான். இலங்கை அரசுக்கு இதுவொரு சோதனைக் காலம். இலங்கையின் கள நிலைமைகளை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது.

க.கோணேஸ்வரன்.
06.01.2012.

புதுமையேதான் !

கவிதை

ஈழத் தமிழருக்கு இதுகாலம் நல்லதல்ல,
எடுத்த முயற்சியாவும் ஏனோ தெரியவில்லை
பாழும் கிணற்றுக்குள் போட்ட கதையாச்சு,
பழந்தமிழர் வீரத்தைப் பறைசாற்றிக் காலமெல்லாம்
வாழ்ந்த தமிழரினம் வாழ்விலே வெற்றிபெற்று
வாழ முடியாமல் வதைபட்ட சம்பவம்தான்
ஈழத்தை அரசாண்ட எல்லாளன் நாள்முதலாய்
இன்றுவரை நடக்கிறது, இதுவெங்கள் தலைவிதியா?
அறிவை வளர்த்து அண்டமெலாம் அதிரவைக்கும்
ஆற்றல் நமக்கிருந்தும் ஆனதோ ஒன்றுமில்லை,
குறிப்பறியத் தெரியாமல் குழம்பித் தடுமாறி
கொள்கையிலும் இடறுண்டு, தமிழ்ச்சமூகம்
தறிகெட்டு ஒற்றுமையைத்தவிர்த்துச் சிதறுண்டு
தவிக்கின்ற நிலமைதனைத் தந்ததுயர் சொல்லுங்கள்!
அறிவுகெட்ட தலைமைகளா? அல்லது நாம் தமிழர்களா?
ஆண்டவனின் விளையாட்டா? ஆர் பொறுப்பு சொல்லுங்கள்
சிங்களத் தலைமையோடு செய்துபல ஒப்பந்தம்
செயல்படுத்த முடியாமல் செத்தழிந்து போயிற்றே!
எங்கள் தமிழ்த் தலைவரெல்லாம் ஏமாந்த சோணகிரி
என்றாகித் தமிழர் வாழ்வு எங்கோ போச்சு!
தந்தை செல்வா, ஜி.ஜி என்ற தலைவரெல்லாம்
தமிழர் துயர் துடைப்பதற்காய்ப் பாடுபட்டும்
எந்தவித பலனையுமே இலங்கைத் திருநாட்டில்
எம்தமிழர் இதுவரையில் சுவைத்ததில்லை.
தோல்விகளைக் கண்டுகண்டு துரியர் முன்னால்
துடிதுடித்து எமது இனம் பொறுக்கொண்ணாமல்
வாலிபர்கள் அணிதிரண்டு ஓர்மத்தோடு
வரலாறு கண்டிராத போர் செய்தாலும்
தோல்வியைத்தான் கண்டார்கள், இதனாலேதான்
தமிழருக்கு இதுகாலம் நல்லதல்ல என்றேன் நான்!
வால்பிடித்தோர் சிலர் வாழ வண்ணத் தமிழரினம்
வண்ணார்கல் நிலையாகி வாழ்வெல்லாம் அழுகிறது.
ஆனாலும் இப்போது அதிகாரப் பரவலாக்கம்
அது குறித்துப் பேச்சுவார்தை ஆரம்பமாகுமென்று
ஆரூடம் கூறுகின்றார், அது விடயம் தொடர்பாக
அழகுதமிழ்த் தலைவர்களும்அணிசேர்ந்து நிற்கின்றார்.
ஆகுமா? ஆகாதா? அதுவும் பழையபடி
அப்படியே தோல்வி கண்டு புஷ்வாணம் ஆகிடுமா?
பார்க்கலாம் தமிழருக்கு பொல்லாத காலம் மேலும்
புலராமல், நல்லகாலம் பூத்தால் புதுமையேதான்!

கவிஞர் செ.குணரெத்தினம்.

நீங்கா நினைவுகள் 2011....

றோயல் திருமணம்







றோயல் முத்தம்



ஈழத்து கலை இலக்கிய வளர்ச்சிக்கு கிழக்கிலங்கையின் பங்களிப்பு.
சிறுவர் இலக்கியம்

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. இது மனிதனையும், அவன் வாழ்ந்த அல்லது வாழும் சமுதாயத்தின் வாழ்க்கை சூழலையும், அவனது உளநிலை, சுவைநிலை போன்ற நல்ல விழுமியங்களையும் காட்டும், மனித மனங்களில் சிந்தனைக் கருவூலங்கலாகும். வுாழ்க்கையில் நல்ல இலக்கை நோக்கி நகரச் செய்வது இலக்கியம் எனலாம். சிறுவர் இலக்கியங்களும் சிறுவர்களினதும் பெரியவர்களினதும் மனங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி அதனூடாகப் பயன்பாட்டு பாரம்பரியங்களை வளர்த்தெடுத்து அவர்களை பண்பாளர்களாக்க உதவுகின்றன. சிறுவர் இலக்கியங்களை இரு வகைப்படுத்தி மரபு இலக்கியம் என்றும் நவீன அல்லது ஆக்க இலக்கியம் என்றும் ஆராய்வார்கள்.

சிறுவர் இலக்கியத்தின் பண்புகள்.
சிறுவர் இலக்கியம் வளர்ந்தோர் இலக்கியத்தை விடவும் வேறுபடும். 'சிறுவர் இலக்கியம் பற்றி சிந்திப்பவர்கள் சிறுவர்களை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார். சிறுவனின் உளநிலை, ஒழுக்கநிலை, ஆளுமை ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். சிறுவர்களது வயது, விருப்புக்கள், குணாம்சங்கள், தேவைகள், நாட்டங்கள், ஆர்வங்கள், மனப்பாங்கு, சூழல், நுண்மதி, சமூகநடத்தைக் கோலங்கள், மொழித்திறன், அறிவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தெரிந்ததிலிருந்து தெரியாத அல்லது அறிமுகமில்லாத பொருட்களை அல்லது விடயங்களை அறிமுகம் செய்யும் வண்ணம் அமையவேண்டும். சிறுவர் இலக்கியத்தில் பரீச்சயமுள்ள ஆய்வாளரான டாக்டர் பூவண்ணன் "சிறுவருக்காக, சிறுவர் உளத்தோடு சிறுவர் மொழியில் உலக அனுபவத்தை விளக்க உருவாகும் படைப்பே சிறுவர் இலக்கியமாகும்." எனக் கூறுவார். 'சிறுவர் இலக்கியம் ஒரு அறிவுசார் ஊடகமாக மட்டுமல்லாது உணர்ச்சிகளின் வடிகாலாகவும், நீண்ட காலம் பயன் தரும் கற்பக விருட்சமாகவும் விளங்க வேண்டும் என்று முனைவர் செ.யோகராசா கருதுவர்.

ஆடலும் பாடலும் அபிநயத்தலும் கதைகேட்டலும் எனச் சிறுவர் உலகம் தனித் தன்மை வாய்ந்தது. புதுமையானது. இயற்கையில் காணப்படும் பொருட்கள் அனைத்தையும் அர்த்தபுஸ்டியுடன் நோக்கும் தன்மை சிறுவர் உலகத்திற்கே உரியது. மரம், செடி, கொடி, ஊர்வன, பறப்பன, விலங்கினங்கள் எனக் காணும் பொருட்கள் எல்லாம் அவர்களைக் கவர்வன. உவகையுறச் செய்வன.

எந்தப் பொருட்களைக் காணினும் அந்தப் பொருட்கள் யாவும் தங்களது உடமையாக்கும் எண்ணம் எழப் பரவசத்தோடு பார்க்கும் உலகம் அவர்களுடையது. பொருட்கள் உயிருள்ளனவோ, அல்லனவோ அவற்றோடு உறவு கொண்டு கருணையும் அன்பும் கொண்டு அபிநயத்துப் பேசி உறவாடும் விநோதமான உலகம் சிறுவர் உலகம். கேள்விமேல் கேள்வி கேட்டு அதீத கற்பனையில் புலக்காட்சி மூலம் அகக்காட்சியை விருத்தி செய்யும் பண்பு சிறுவர் உலகின் தனிப்பண்பாகும். அதற்கேற்பச் சிறுவர் இலக்கியங்கள் அமைய வேண்டும்.

சிறுவர் என்போர் யார்?
இவ்வினா அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்களைத் தோற்றுவிக்கக் காரணமாக உள்ளது. பலரும் பல்வேறு விதமாக கூறுவார்கள். ஆங்கிலத்தில் 'children' என்ற சொல்லைப் பொதுவாக சிறுவர் என்று அழைக்கின்றார்கள். ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்ரியர் தொட்டு நமது நவீன கல்வி உளவியலாளர்கள் வரை சிறுவர் பற்றிய சிந்தனைகளைத் தந்திருக்கின்றார்கள். ஷேக்ஸ்பியர் மனிதர் வாழ்க்கையை ஏழு கட்டங்களாக வகுத்துப் பார்த்தார். எரிக். ஏரிக்சன் எட்டுக்கட்டங்களாக வகுத்துப் பார்த்தார். பிள்ளைத்தமிழ் பாடிய நமது தமிழ்ச் சான்றோர் பத்துப் பருவங்களாகப் பார்த்தார்கள்.

குழந்தை, மழலை, பாலர், தவ்வல், பச்சைமண் எனத்தமிழில் உள்ள அத்தனை செற்களையும் சிறுவர்(Children) என்ற பதத்தினுள் அடக்கியுள்ளதை அவதானிக்கலாம். இங்கு பால்நிலைச் சமத்துவத்தைக் காண்கிறோம். ஆண், பெண் எனப் பாகுபாடு செய்யப்படவில்லை. ஆனால் கீழைத்தேசச் சான்றோர்கள் பெண்பிள்ளைகள் பூப்பெய்தும் வரை பால்நிலைச் சமத்துவத்தைக் காட்டுவர். பூப்பெய்துவது குறிப்பாக முன்குமரப் பருவத்திலேயே இடம் பெறுகிறது. ஆதலால் சிறுவர் என்ற பொதுச் சொல்லையே நாம் சிறுவர் இலக்கிய ஆய்வுக்காக எடுத்துக் கொள்வோம்.

பிள்ளைகளின் வயதுக்கேற்ற அல்லது பருவத்திற்கு ஏற்ப நிலாவையும், பறவைகளையும் காட்டி உணவூட்டத் தாய் கதை கூறுகிறாள். உறங்குவதற்கு தாலாட்டும், உண்ணும் போது கதையும், விளையாடும்போது ஆடலும் பாடலுமாக வளர்ப்புக் கலை இருப்பதைக் காண்கிறோம். குழந்தையின் வயதுக்கும் பருவத்திற்கும் ஏற்றால் போல் பாடலும் கதைகளும் விநோதமாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். குழந்தையை சிந்திக்க வைப்பதற்காய் எழுந்ததுதான் நொடி அல்லது விடுகதை எனப்படும் பிசி ஆகும். பிசி பற்றி தொல்காப்பியம் இவ்வாறு கூறுகிறது.

'ஒப்பொடு புணர்ந்த உவமத்தானுந்
தோன்றுவது கிளைந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே...' (தொல்- பொருளதிகாரம் -488)

விடுகதைகளை சிறுவர்கள் விரும்பிக் கேட்பர். தாய்மார்களும் பாட்டிமார்களும் விடுகதைகளைக் கூறிப் பிள்ளைகளின் சிந்தனா சக்திக்குத் தீனிபோடுவர்.

'வளர்ப்புக் கலை' வடிவங்கள்.
நமது ஆன்றோர்கள் நமக்கு 'வளர்ப்புக் கலை' வடிவங்களைத் தந்துள்ளனர். வளர்ப்பு என்பது வளர்த்தல் என்னும் தொழிலைக் குறிப்பது. இது ஒரு தாய் தன் பிள்ளையை வளர்க்கும் முறையின் சிறப்பைக் கூறுவது. அன்புடன் பிள்ளையை வளர்க்கும் பாங்கில் பாடப்பெறும் வளர்ப்புக் கலை வடிவங்களையே 'பிள்ளைத் தமிழ்' என்கிறார்கள்.

அழுகிற குழந்தையின் சிந்தனை யைத் திசை திருப்பி மாற்றியமைக்க தாய் விளையாட்டுக் காட்டுகிறாள் பிள்ளையை இருத்திப் பிஞ்சுக் கைகளைப் பற்றி விரித்துச் சின்ன விரல்களைப் பிடித்து ஒவ்வொரு விரலாக நீவி சுளுக்கெடுத்து விடுகிறாள். தாங்கள் வாழும் சூழலுக்கேற்ப ஒவ்வொரு விரலுக்கும் ஒவ்வொரு வகை உணவின் பெயர்களைக் கூறி ஈது சோறு, இது கறி, இது பருப்பு, இது பொரியல், இது குழம்பு என்று சொல்லி பிள்ளையின் உள்ளங்கையில் போடுவார். தனது முன்னங்கையால் ஆடைகடை, கீரை கடை எனக் கடைந்து உணவினைப் பங்கிடுவார். ஒரு பங்கு அப்பாவுக்காம். ஒரு பங்கு அம்மாவுக்காம். ஒரு பங்கு தாத்தாவுக்காம். இன்னொரு பங்கு மாமாவுக்கும் மாமிக்குமாம். இன்னொரு பங்கு காகத்துக்குமாம். ஒரு பங்கு கோழிக்காம். ஒரு பங்கு பிள்ளைக்காம். என்று கூறி விரல்களை நண்டு ஊர்வதைப்போல் பிள்ளையின் கையில் மேல் நோக்கி நகர்த்துவதைக் காணலாம். கைவிரல்கள் நகர்ந்து கொண்டி ருக்கம். 'நண்டூருது..நரியூருது என்று சொல்லி கிசுகிசு காட்டி விளையாடி மகிழ்வது தொன்று தொட்டு வரும் வழக்கமாக உள்ளதை இன்றும்காணலாம். பிள்ளைகளின் நம்பிக்கையையும் தன்னைச் சூழ நின்று அனைவரும் தனக்கு பாதுகாப்பு தருவார்கள் என்ற மனவுறுதியைக் கொடுப்பதாகவும் அமைகிறது. அத்துடன் குழந்தை யைச் சூழவுள்ள உயிரினங்களையும் அறிமுகம் செய்கின்றதாக அமைகின்றது. நுல்லதொரு சூழலில் குடும்ப உறவினையும் பண்பாடுகளையும் நாசுக்காகத் தாய் புகுத்துவதை நன்றாக சிந்தித்தால்தான் புரிந்து கொள்ள முடியும்.

நமது கலாசார பாரம்பரியங்களைப் பிள்ளையின் மனதிலே விதைத்தும் விடுகிறார். மொழியினை கற்றுக் கொள்ளவும் அதனைப் புரிந்து கொள்ளவும் சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. பிள்ளையை தொட்டிலில் இட்டுக் கண்ணயரும்படி தாய் தாலாட்டுப் பாடுவது ஓசை நயம் மிக்கதாகவும், பொருள் நயம் உள்ளதாகவும், தாங்கள் வாழும் சூழலை வர்ணிப்பதாகவும் இருப்பதைக் காணலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியாழ்வார் கண்ணனை குழந்தையாகக் கற்பனை செய்து பாடிய 'பிள்ளைத்தமிழ்' தமிழின் முதல் 'வளர்ப்புக் கலை' வடிவமாக அமைகிறது. பிள்ளையின் ஆரம்பப்பிள்ளை வாழ்க்கையைப் பத்துப் பருவங்களாக வகுத்தப் பார்த்துப் போற்றினார்கள். அதற்கேற்பப் பிள்ளைத்தமிழ் பாடினார்கள். குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தொரு திங்கள் வரை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று, பதினைந்து, பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்று எனப் பத்துப் பருவங்கள் அமையும். இவை ஒற்றை மாதங்களாகக் கொள்வதை அவதானிக்கலாம். இதனை பன்னிரு பாட்டியல் :-

"பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலாம் மூவேழ் அளவும் ஆன்ற திங்களில் அறைகுவர் நிலையே"

எனக் கூறும். ஆனால் மாதங்களாக யாவற்றையும் ஏற்றுக் கொள்வது பொருத்தமற்றதாக தெரிகின்றது. இறுதியாக உள்ள மூன்று பருவங்களையும் அதாவது பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்று என்பவற்றை நாம் திங்கள் என்று கொள்வது பொருத்தமுடையதாக அமையாது. இவற்றைப் பிள்ளைப் பருவம், முன்குமரப்பருவம், குமரப்பருவம் எனக் கொள்வது சாலச் சிறந்ததாகும். பிள்ளைத்தமிழ் ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படுத்தியுள்ளார்கள்.

குழந்தை பிறந்து மூன்றாம் மாதம் முதல் மூன்று, ஐந்து, ஏழாம் ஆண்டு வரையிலான பருவங்களைக் கொள்வது பொருத்தமுடையது எனப் பலர் கருதுகின்றனர். இதனையே டாக்டர் பூவண்ணனும் கூறுவர். இதனை 'வச்சிணந்தி மாலை'யும் இவ்வாறு

"முறை தரு மூன்று ஆதி மூவேழிருந் திங்கள்
அறைக நிலம் பத்தும் ஆண்டு ஐந்தேழ்'

எனக் கூறுகிறது.

சிலர் ஏழு ஆண்டுகளுக்கு மேலும் சில ஆண்டுகளைக் கொண்டு அது ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குப் பொருந்தும் எனக் கூறுவர்.

அதனை 'இந்திர காளியம்' எனும் நூல் இவ்வாறு

"தோற்ற முதல் யாண்டு ஈரெட்டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற்குரிய"

என ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரியதாகக் காட்டுகிறது. இதனடிப்படையில் ஆண்பால் பிள்ளைத்தமிழ் பதினாறு வயது வரையான எல்லைவரை செல்ல இடமளிக்கிறது. அதேபோல் பெண்பால் பிள்ளைத்தமிழ்

"காப்பு முதல் ஆகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற்குரிய"

எனக் கூறுகிறது. இது பெண்கள் பூப்பெய்தும் காலம் வரை காட்டுகிறது. பொதுவாகக் கூறின் சிறுவர் என்ற பதம் பதினாறு வயது வரையான காலப்பகுதியைக் கொண்டுள்ளதாக நமது சான்றோர் ஏழாம் நூற்றாண்டுக்குமுன்னரே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை
பிறந்தது முதல் 18 வயது வரையான ஆண், பெண் இருசாராரையும் சிறுவர் என்ற வரையறைக்குள் அடக்குவர். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான உரிமைப்பட்டயம் இதனைக் கூறுகின்றது. ஆதலால் இந்த வரையறைக்குள் நின்று சிறுவர் இலக்கியத்தினை ஆராயலாம். அப்படி ஆராயும்போது சிறுவர்களுக்காக அவர்களது வயதுகளுக்கேற்றபடி ஐந்து பருவங்களுக்கு உரிய வகையில் அவற்றை ஆராய்தல் வேண்டும் இதனடிப்படையில் நோக்கும்போது சிறுவர் இலக்கியம் ஐந்து பருவங்களைக் கொண்டு அந்தந்த பருவத்தினருக்கு ஏற்ற வகையில் அமைந்திருத்தல் அவசியமாகும் என்பது புலனாகும். இது

சாத்தியப்படுமா என்பது கேள்வியாகவும் நிற்கிறது.

முதலாம் பருவம் குழந்தை 02 வயது வரை, இரண்டாம் பருவம் முன்பிள்ளை 03 – 05 வயது வரை, மூன்றாம் பருவம் பிள்ளை 06 – 10 வயது வரை, நான்காம் பருவம் முன் குமரப் பருவம் 11 – 15 வயது வரை, ஐந்தாம் பருவம் குமரப் பருவம் 16 – 18 வயது வரை

"சிறுவர்" என்ற சொல்லினைக் கல்வி உளவியலாளர்களின் பகுப்பாய்வுகளின்படி அறிஞர்கள் பொதுவாக ஐந்து பிரிவுகளுக்குள் அடக்கி ஆராய்வதனைக் காணலாம்.

7ம் பக்கம் பார்க்க.......

ஈழத்துக்கலை....

வளர்ப்புக் கலை தொன்று தொட்டு நிற்கிறது என்று உயிரினங்கள் தோன்றினவோ அன்றே வளர்ப்புக் கலை தொடங்கிற்றெனலாம். காலம் காலமாக, வாழையடி வாழையாக இந்தப் பண்பு வளர்ச்சி கண்டுள்ளது. அனுபவ வாயிலாக வந்த இக்கலையை வாய்மொழியூடாகப் பதிந்து தலைமுறை வழிவழியாக போற்றி காத்துள்ளனர். ஏழாம் நூற்றாண்டுகளுக்கு முன்பே இக்கலை தோற்றம் பெற்று வளர்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் சமூகத்தில் உள்ளனவற்றைத்தான் இலக்கிய கர்த்தாக்கள் நமக்கு தந்திருக்கிறார்கள். காலத்தின் கண்ணாடிதானே இலக்கியம். சிறுவர் இலக்கியம் பற்றி ஆராயப்புகின் சங்கப்பாடல்களில் இருந்து தொடங்க வேண்டும் என்று பிரபல ஆய்வாளரான கலாநிதி செ.யோகராசா கூறுவர். அதுதான் உண்மையுமாகும்.

குழந்தையின் இயல்பாக உள்ள நிலை, செயல், தன்மை, ஆர்வம் ஆகியவற்றைப் பாடல்களில் அமைத்துப் பாடுவார்கள். அதற்கேற்ப களமமைத்துப் பிள்ளைத்தமிழ் பாடினார்கள். இவ்வழியே மொழியறிவை ஊட்டினார்கள். பிள்ளைகளின் உள்ளங்களில் நம்பிக்கையையும் பாதுகாப்பையும், மனவுறுதியையும் கட்டியெழுப்பினார்கள். பிள்ளைகள் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றியடைவதற்கேற்ற சந்தோசமான சூழலை உருவாக்கி கொடுக்க வேண்டும் என்று அழகாகச் சொல்லி வைத்துள்ளார்கள். பிள்ளைகளை மகிழவைத்துத் தாமின்புறுவதற்காக பாடிய பாடல்களே பிள்ளைத்தமிழ்ப் பாடல்களாகின.

பிள்ளைத்தமிழ் பெரியவர்களால் பாடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். தமது உள்ளம் கவர்ந்த தலைவர்களை அல்லது தெய்வங்களைக் குழந்தைகளாகப் பாவித்து அவர்கள்மேல் பாடல்களை யாத்து மகிழ்ந்தார்கள். அவர்களின்மேல் கொண்ட அன்பினால் அவர்களது செயல்களையும் குணாம்சங்களையும் எடுத்துரைத்து மகிழ்வதாக அமைந்திருப்பதைக் காணலாம். இதனால் பெற்றவர்களும் கேட்கும் மழலையரும் அக்காட்சியைப் பார்க்கும் மற்றவர்களும் பேருவகை கொள்வதை உணரலாம். இவ்வகையான பண்டைய பாரம்பரிய நெறிமுறைகளையும், ஆய்வுகளையும் விடுத்து மேற்குலக அறிஞர்கள் சொல்வதுதான் சிறந்தது என அவர்களையே எடுத்துக்காட்டுகளுக்குத் தூக்கிப் பிடிப்பது வேடிக்கையானதும் விந்தையானதுமாகும். நமது பாரம்பரியங்களை சுவாமி விபுலானந்தர்போல் மேற்குலகத்திற்கு காட்ட வேண்டும்.

முதலாவது பருவம் 00–02 வயது வரையான பருவமாகும். இப்பருவத்தில் புலன்கள் விருத்தியாகும் பருவம். எழுத்துக்களை அறியாத பருவமாகும். இப்பருவத்தில் எவ்வாறான இலக்கியங்கள் தேவைப்படும்? பிள்ளை ஒலிகளிலும் கவர்ச்சியான நிறங்களைக் காண்பதிலும், சுற்றுச் சூழலை புரிந்து கொள்வதிலும் ஆர்வம் காட்டும். மழலை பேசி தாய், தந்தை, சுற்றத்தார் மகிழச் சிரித்து தனது உணர்ச்சிகளைக் காட்டும் பலுவமல்லவா? இப்பருவத்தில் நமது சான்றோர்கள் அருளிச் செய்த பிள்ளைத்தமிழ் இலக்கியங்களைக் கவனத்தில் கொள்ளுவது சாலப் பொருத்தமானதாகும். இந்நிலையில் சிறுவர்களுக்காகப் பெரியவர்களால் பாடப்படுவதை அவதானிக்கலாம். ஐந்தாம் பருவமான 16 – 18 வயது வரையான குமரப் பருவம் மிகவும் முக்கியமான உணர்ச்சிகள் ஊற்றெடுக்கும் பருவமாக உளவியலாளர்கள் கொள்வர். நமது சிறுவர் இலக்கியக்காரர்களும் முதலாம் பருவத்தினரையும் ஐந்தாம் பருவத்தினரையும் தவிர்ந்த மூன்று பருவத்தினரையே(03 – 15) சிறுவர் என பெரும்பாலும் கொள்வதை அவதானிக்கலாம். இக்கட்டத்தினுள் அடங்கும் சிறுவர்களது வயது, பருவம், அறிவு, ஆற்றல், விருப்பு, வெறுப்பு, சுவை ஆகியவற்றை உளநிலைக்கு ஏற்ப அறிஞர்களும் ஆய்வாளர்களும் பகுத்தும் வகுத்தும் கூறியுள்ளனர்.

மேல்நாட்டு சிறுவர் எழுத்தாளரும் ஆய்வாளருமான ஜெனற் அடம்ஸிமித் சிறுவர் பற்றியும் அவர்களது குணநலம், ஊக்கம், தூண்டல்களை உள்நோக்கிலும் பருவமாறல் நிலைகளிலும் பல அரிய தேடல்களைச் செய்து 03 வயது தொக்கம் 15 வயது வரை உள்ள ஆண், பெண் இருசாராரையும் சிறுவர் எனக் கணிப்பிட்டுள்ளார்.

சிறுவர் இலக்கியம் எனப் பொதுப்படையாக கருதினாலும் அதனை வயது, பருவம், அனுபவம் என்பவற்றுக்கு ஏற்ப (1) பாலர் இலக்கியம் (2) பிள்ளை இலக்கியம் (3) முன்குமர இலக்கியம் என மூன்று வகைக்குள் அடக்கி ஆராய்தல் பொருத்தமுடையதாகும் எனக் கூறுவர்.

நமது சான்றோர்கள் குழந்தை பிறந்து மூன்றாம் திங்கள் முதல் பத்துப் பருவங்கள் கொண்டதாக காட்டுவர். நவீன கல்வியியலாளர்களின் கணிப்பின்படி முதலாவது பருவமான குழந்தைப் பருவத்தை இந்த வரையறை குறிக்கும் இப்பருவம் பெற்றாரை இன்பத்தில் ஆழ்த்தும் பருவமாகும்.

இப்பருவத்துள் குழந்தைகள் தலையை உயர்த்தி உலகத்தை எட்டிப்பார்த்து பொருட்களை அளைந்து அனுபவம் பெறும் பருவமாகும். பக்கம் புரல்வதும் குப்புற புரண்டு விளையாடுவதும் பார்க்க இன்பமாக இருக்கும். அப்படியே உன்னி முன்னும் பின்னும் அசைந்து விளையாடும். இருக்க விரும்பும் பிடிமானங்களின் உதவியுடன் இருக்கும். இருந்த இடத்தை விட்டு நகர்ந்து ஊரத் தொடங்கும் கைகால்களை அடித்தசைத்துச் சத்தமிட்டு சிரித்து ஒலியெழுப்பி மகிழும் பருவமாகும். நெஞ்சு நிலத்தில் படும்படி உன்னி நகரும். கைகால்களை ஊன்றித் தவழும்.

இந்தப் பருவத்தில் புலன்கள் துரிதமாக விருத்தியடையும். பிள்ளை உன்னிப்பாகப் பார்க்கவும் கேட்கவும் கிரகிக்கவும் செய்யும். எழுத்துக்களை அறியாத பருவமாகும். இப்பருவத்தில் எவ்வாறான இலக்கியங்கள் தேவைப்படும். அவை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்? இப்பருவத்தில் அவர்களுக்குப் பொருத்தமான இலகுவான நடையில் இலக்கியம் படைக்க வேண்டும். தாய் தந்தை, உறவினர்கள் துணையுடன் பிள்ளை கற்றுக் கொள்கின்றது. எனவே பெரியவர்கள் ஊடாக சிறுவர்களுக்கு இலக்கியம் போய்ச் சேருகின்றது. அவ்வழி வந்தவைதான் தாலாட்டுப் பாடல்களும் கதைகளும் ஆகும். ஆகவே முதல் பருவத்திற்குரிய இலக்கியங்கள் பயனுள்ளதாக பண்புகள் நிறைந்ததாக அமைதல் வேண்டும். இளமையில் மனதில் பதியும் எண்ணக்கருக்கள் வளர்ந்த பின்னும் நிலைத்து நிற்பன. இதனைத்தான் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்றார்கள்.

நமது சான்றோர்கள் தாய்மை அடைந்த பெண்ணுக்கு எடுக்கும் சடங்குகளையும் நோக்க வேண்டும். தாய்மையுற்றவரை மிகவும் கவனமாகப் பேணுவதைக் காணலாம். கருவுற்ற தாய் சந்தோசமாக இருப்பதற்கேற்ற சூழலை உருவாக்கி கொடுப்பதையும் அவதானிக்கலாம். அவருக்கு நலங்கிடுவார்கள். வளைகாப்பு அணிவித்து அழகு பார்ப்பார்கள். ஊட்டமுள்ள உணவு கொடுத்து நல்லனவற்றைக் கேட்கவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவார்கள். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் இரண்டு உண்டு.

1.ஒரு தாய் குழந்தையை பெற்றெடுத்து விடுவது சாதாரன செயலல்ல. குழந்தையை பெற்றெடுப்பதென்பது 'செத்துப் பிழைத்தலாகும்.' சுகப்பிரசவம் நடந்து நலமாக தாய் வாழவேண்டும் என்பதற்காக அவளை மிகக் கவனமாகப் போற்றுகிறார்கள்.

2.இவையெல்லாம் தாய்க்கு செய்தாலும் பயனைப் பெறுவது கருவில் உள்ள குழந்தைதான். கருவில் உள்ள குழந்தை கருவில் திருவுடையனாகி சான்றோனாகத் திகழ்வதற்காகத்தான் இவ்வளவு சடங்குகளையும் செய்கிறார்கள். தாயின் மகிழ்ச்சி பிள்ளையை நோக்கி நகர்கிறது.

ஆறுவயதுக்கு முன்னர் ஏற்படும் கற்றல் அனுபவங்கள் பிள்ளையின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் இயல்பினைக் கொண்டுள்ளன. நல்ல அனுபவங்களைப் பெறக் கூடிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் சிறார்களுக்கு நாம் செய்து கொடுத்தால் அவர்களது வாழ்வு வளமாகும். மனித வாழ்க்கை விசித்திரமானது. அந்த வாழ்க்கையை வளப்படுத்த சூழல் முக்கிய பங்கினை ஏற்றுக் கொள்கிறது. மரபணுக்களும், சூழலும் சிறார்களின் விருத்தியை தீர்மானிக்கின்றன.

மனிதனை விலங்கிலிருந்து பிரிப்பது அவனது நற்குணங்களும் நற்செயல்களும்தான். காந்தம் எந்த வடிவிலும் இருக்கலாம். அது இரும்புத் துண்டங்களைக் கவர்ந்திழுக்கும். ஆதலால் மனித விழுமியங்களைக் கட்டியெழுப்பும் சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும். சிறுவர் இலக்கியங்களும் அவ்வாறே படைக்கப் படவேண்டும். இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை என்பார்கள்.

சிறுவர் இலக்கிய முன்னோடிகள்.

சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகள் பெற்றோர்கள்தான். சிறப்பாகத் தாய்தான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதனை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கருவுற்றதிலிருந்து பெற்றெடுத்து சீராட்டி தனது மடியைத் தொட்டிலாக்கி குழந்தையின் முகத்தைப் பார்த்துப் பேசி, உறங்கவைக்க தாலாட்டி, உணவூட்ட கதை கூறி, அக்குழந்தைக்குக் கதை கூற தனது கற்பனையை, மொழிவளத்தைப் பெருக்கி அனுபவித்துக் கொடுக்கும் தாயின் சொத்தாக விளங்குகின்றன. பிள்ளைகளுக்காக அவர்களால் தோற்றம் பெற்றவைதான் சிறுவர் இலக்கியங்களாகும்.

ஈழத்தில் சிறுவர் இலக்கிய முயற்சிகள்.

தமிழகத்தில் சிறுவர் இலக்கிய முயற்சிகள் தொடங்கு முன்னரேயே ஈழத்தில் தொடங்கி விட்டது. ஈழம் சிறுவர் இலக்கிய முயற்சிகளின் முன்னோடி எனலாம். முதன்முதலாக 1886 இல் ஈழத்தைச் சேர்ந்த தம்பிமுத்துப் பிள்ளை 'பால்யக்கும்மி' என்ற பெயரில் சிறுவருக்கான பாடல் நூலை வெளியிட்டுள்ளார். 1918 ஆம் ஆண்டு இலங்கை ஆராட்சி முதலியாரான ச.வைத்தியநாதர் குழந்தைப் பாடற்தொகுதியான தமிழ்ப் பாடபோதினி என்ற அபிநயப் பாடல்களின் தொகுதியை வெளியிட்டார். 1935 ஆம் ஆண்டு வட பெரும்பாக வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய கே.எஸ். அருணந்தி சிறுவர் இலக்கிய பரிசுப் போட்டியை நடாத்தினார். போட்டியில் பரிசுக்குரிய பாடல்களைத் தெரிவு செய்யும் நடுவர்களாக சுவாமி. விபுலானந்தர், சுவாமி. ஞானப்பிரகாசர், நவநீத கிருஷ்ணபாரதியார், பண்டிதர் மகாலிங்க சிவம், பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை முதலானோர் கடமையாற்றினர். அப்பாடல்களைத் தொகுத்து வட இலங்கை தமிழாசிரிய சங்கம் 'பிள்ளைப் பாட்டு' என்ற பெயரில் வெளியிட்டது. இப்போட்டியினூடாகவே க. சோமசுந்தரப் புலவர், மா. பீதாம்பரம், அகிலேச சர்மா

போன்றோர் வெளியுலகினுக்கு அறிமுகமாகினார்கள். இப் போட்டி தமிழாசிரியர்களிடையே ஒரு உத

வேகத்தையும், திருப்பு முனையையும் தோற்றுவித்தது. உண்மையில் தமிழாசிரியர்களே சிறுவர் இலக்கியத்துக்கு ஊன்று கோலானார்கள் எனப் பேராசிரியர் கலாநிதி செ. யோகராசா குறிப்பிடுவர்.

இன்று ஈழத்தில் சிறுவர் இலக்கியம் நன்கு வளர்ச்சியடைந்து வருகின்றது எனலாம். நவாலியூர் சோமசுந்தரப்புலவர், மா. பீதாம்பரம், வித்துவான்.கா. வேந்தனார், மு. செல்லையா, முதுதமிழ்ப் புலவர், மு. நல்லதம்பி, அனு.வை. நாகராசன், வ.ராசையா, பா. சத்தியசீலன், பண்டிதர். க. வீரகத்தி, உடுவை. தில்லைநடராசா, எம்.சி.எம். சுபைர், கோசுதா, வித்துவான் கமலநாதன், திமிலைத் துமிலன், திமிலை மகாலிங்கம், மாஸ்டர் சிவலிங்கம், இ. சிவானந்தம், த.துரைசிங்கம், சு.துரைசிங்கம், ஒ.கே. குணநாதன், பி.பி. அந்தோனிப்பிள்ளை, வித்துவான் சி. குமாரசாமி, பேராசிரியர் மௌனகுரு, சண்முகம் சிவலிங்கம், ராதாகிருஸ்ணன், கல்வயல் குமாரசாமி, வாகரை வாணன், யசோதா பாஸ்கரன், அம்பி ச.வே.பஞ்சாட்சரம், மயிலங்கூடலூர் பி. நடராசன், மண்டூர் தேசிகன், சாரணா கையூம், மனோண்மணி பற்குணம், ராணி சீதரன், அ. அருள்பாஸ்கரன், ஜெனீரா தௌபீக், பாயிஸா அலி, அம். கௌரிதாசன், தாமரைத் தீவான், ஆலையூரான், க.தங்கராசா, வே. தங்கராசா, ஈச்சையூர் தவா, ராதாகிருஷ்ணன், அகளங்கன், எஸ். ஞானராசா, தம்பி தில்லை முகிலன், (1992 இல் யாழ்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் கல்வி கற்ற) செல்வன். தர்மேந்திரா, செல்வி. அருள்சுலக்ஷிகா, சித்தி அமரசிங்கம், செல்வி. மு. தேவதர்ஷினி, திருமதி. இரா. பத்மினி, ஜனாபா.என. நாகூர் உம்மா, ச. அருளானந்தம் இன்னும் பலர் சிறுவர் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். பத்திரிகைகளில் சிறுவர்களும் எழுதி வருகிறார்கள்.

8ம் பக்கம் பார்க்க....

ஈழத்துக்கலை....

ஈழத்து கலை இலக்கிய வளர்ச்சிக்கு கிழக்கிலங்கையின் சிறுவர் இலக்கியம் : பங்களிப்பு.

இன்று கிழக்கிலங்கையில் சிறுவர் இலக்கியம் வளர்ச்சியடைந்து வருகிறது எனலாம். கிழக்கிலங்கையிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சிறுவர் இலக்கிய முயற்சியில் பலர் ஈடுபட்டு உழைப்பதைக் காணலாம். பலர் சிறுவர்களுக்கான பாடல்களை எழுதியுள்ளார்கள், எழுதுகிறார்கள். சிலர் சிறுவர்களுக்கான கதைகளை எழுதுகிறார்கள், சிறுவர்களுக்கான நாடகங்களை சிலர் எழுதுகிறார்கள், சிலர் சிறுவர் நாவல்களையும் எழுதுகிறார்கள். அம்பாறையில் வெற்றிவேல் வினாயகமூர்த்தி, மாணிக்கவிராயர், மருதூர் மஜீட், யோக யோகேந்திரன், அன்புடீன் போன்றோரும் இன்னும் பலரும் சிறுவர் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டுழைக்கின்றனர்.

மட்டக்களப்பில் வித்துவான் சா.இ. கமலநாதன், திமிலைத் துமிலன், திமிலை மகாலிங்கம், மாஸ்டர் சிவலிங்கம், ஆரையூர் அமரன், ஒ.கே. குணநாதன், வாகரை வாணன், நாகூர் பாவா, செ. குணரெத்தினம், மண்டூர் தேசிகன், ஆ. தங்கராசா, எம்.எஸ். பாலு, ஏறாவூர் தாவூத், மட்டுநகர் முத்தழகு, ஆனந்தன், கவியுகன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

வித்துவான் சா.இ. கமலநாதன் அவர்கள் 1947 இல் 'உண்மையிலே சொல்லிடுவாய்' என்ற பாடலை எழுதியுள்ளார்.

"சண்டைகள் வந்தாலும் - குழந்தாய்
குண்டுகள் வீழ்தாலும்
மண்டை யுடைந்தாலும் - குழந்தாய்
உண்மையே சொல்லிடுவாய்" எனப் பாடியுள்ளார்.

1948 இல் புவனாவின் பூனைக் குட்டி என்ற சிறுவர் பாடலைப் பாடியுள்ளதை பேராசிரியர் கலாநிதி செ. யோகராசா குறிப்பிடுகிறார்.

"சின்னச் சின்னக் காலை வைத்து
மெல்லப் போகுதே – சோறு
தின்வந்த எலியை எல்லாம்
கொல்லப் போகுதே" என்ற பாடல்கள் அவரது சிறுவர் பாடல்களுக்குச் சான்றாக விளங்குகின்றன.

ஆரையூர் அமரன் ஏறத்தாள 150 சிறுவர் பாடல்களை இயற்றியுள்ளதாகப் பேராசிரியர் செ. யோகராசா குறிப்பிடுவர்.

திமிலைத் துமிலன் சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைக் கவிதை போட்டியில் (1959) பரிசு பெற்றார். திமிலை மகாலிங்கம் பாடல்களுடன் சிறுவர் கதைகளையும் எழுதியுள்ளார். வாகரை வாணன் புகழ் பூத்த சிறுவர் எழுத்தாளர். சிறுவர் பாடல்கள், கதைகள் என எழுதியுள்ளார். இவர்களுள் ஒ.கே. குணநாதன் பல்துறை விற்பன்னர். சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள் என நிறையவே எழுதிக் கொண்டிருப்பவர். பலர் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் பீதாம்பரனார், தா.பி. சுப்பிரமணியம், தாமரைத் தீவான், ஆலையூன் க. தங்கராசா, வே. தங்கராசா, ஜெனீரா தெளபீக், பாயிஸா அலி, ஈச்சையூர் தவா, ராணி சீதரன், மனோன்மணி பற்குணம், சசிகலா செல்லத்தம்பி, கிண்ணியா கட்டார், அம். கௌரிதாசன், சித்தி அமரசிங்கம், க. யோகானந்தம், ஜனாப் ஜவாத், கலாநிதி கே.எம்.எம். இக்பால், ச.அ. அருள்பாஸ்கலன், செ. ஞானராசா, செல்வி. அ. அருள்சுலக்ஷிகா, செல்வி. மு. தேவதர்ஷினி, திருமதி. இராஜசீலன் பத்மினி, ஜனாபா.என். நாகூர் உம்மா, கேணிப்பித்தன் ச. அருளானந்தம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

அண்மையில் (2011) ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் ஆறாந்தரத்தில் கற்கும் மாணவி செல்வி. அ. அருள்சுலக்ஷிகா 'வீரபாபுவின் குதிரை' என்ற அற்புதமான சிறுவர் கதையினை எழுதி வெளியிட்டுள்ளார். செல்வி. மு. தேவதர்சினி, திருமதி. இராஜசீலன், பத்மினி, ஜனாபா, நாகூர் உம்மா போன்றவர்கள் ஈழத்தில் சிறுவர் எழுத்தாளர் வரிசையில் இடம்பிடித்துக் கொண்டுள்ளார்கள். இவர்களுடன் இன்னும் சுமார் 30 முன்பள்ளி ஆசிரியர்களின் சிறுவர் இலக்கியப் படைப்புகள் அச்சேறிக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைகளில் சிறுவர்களும் எழுதி வருகிறார்கள். இன்னும் பலர் சிறுவர் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். திருகோணமலை மாவட்டம் பொதுவாக இலக்கிய வளர்ச்சியில் பின்தங்கியே உள்ளது. விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே இத்துறையில் ஈடுபட்டள்ளனர். சிறப்பாக கிழக்கு மாகாணத்தில் சிறுவர் இலக்கியத் துறையில் அதிகளவு நூல்களை எழுதி வெளியிட்ட பெருமை கேணிப்பத்தன் ச. அருளானந்தத்தையே சாரும். அவர் இதுவரை 20 சிறுவர் பாடல் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 12 சிறுவர் கதை நூல்களையும் 8 சிறுவர் நாவல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். வித்தகன் விபுலானந்தன் என்ற சிறுவருக்கான ஆய்வு இலக்கிய நூலையும் வெளியிட்டுள்ளார். இவரது 52 வது நூலாகச் சந்திரன் கதைகள் வெளிவந்துள்ளது.

சிறுவர் இலக்கிய வெளியீட்டு முயற்சிகள்.

சிறுவர் இலக்கிய முயற்சிகளுக்கு உதவுவோர் நம்மிடையே எண்ணிக்கையில் மிகமிகக் குறைவு.

சிறுவர் பாடல் உத்திகள்.

சிறுவர் பாடல்களைப் படைப்பவர்கள் பல்வேறு உத்திகளைக் கையால்வதை கவிஞர் த. துரைசிங்கம் எடுத்துக் காட்டுவதை அவதானிக்கலாம். அவற்றை வேண்டுதல் உத்தி , ஒலிநய உத்தி, வர்ணனை உத்தி, தோழமை உத்தி, தானுரை உத்தி, உரையாடல் உத்தி, கற்பித்தல் உத்தி, உவமை உத்தி, விடுகதை உத்தி, அறிவுரை உத்தி, நாடக உத்தி, கதைப்பாடல் உத்தி, அறிவியல் உத்தி போன்றவற்றைக் குறிப்பிடுவர்.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கம் உள்ள வேறுபாடு வளர்ச்சியொன்றுதான். சிறுவர்கள் வளர்பவர்கள். அவர்களது வளர்ச்சிக்குத் துனை போவது வளர்ந்தோரின் தலையாய கடமையன்றோ? படிப்பை ஆசிரியர் கற்பித்துத் தருகிறார். ஆனால் பண்பை கற்றுத் தருவது யார்? பெற்றோரையும் பெரியோரையும் பார்த்து ஓரளவு பண்பை, ஒழுக்கத்தை கற்றுக் கொள்கிறார்கள். அது போதுமானதா? நற்குணங்களையும், வீரத்தையும், விவேகத்தையும், பிரச்சனைகளை உணர்ந்து விடுவிக்கும் ஆற்றலையும் சிறுவர் இலக்கியங்கள் கற்றுத் தருகின்றன. இந்த உண்மையை உணர்வோர் சிறுவர்களுக்குச் சிறந்த சிறுவர் இலக்கியங்களைக் கற்றிடும் வாய்ப்பினை ஏற்படுத்துவர். சிறுவர் இலக்கியம் எங்கே வளர்கிறதோ அங்கே மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும். ஏனென்றால் சொர்க்கத்தின் திறவுகோல் சிறுவர்கள் அல்லவா?

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சிறுவர் இலக்கியங்களை வகைப்படுத்தி அவற்றுக்கான பரிசுகளை 2010 தொடக்கம் வழங்கத் தொடங்கியிருப்பது போற்றுதற்குரிய அரிய செயலாகும்.

ச. அருளானந்தம்.

வடக்கு......

ஐயாவையும் விமர்சிக்கின்றார்கள். அவர்கள் ஒன்றைமட்டும் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச நாடுகள் அவரையுயும தமிழ்த்தேசிய கூட்டமைப்பையும் ஏற்றுக் கொண்டுதான் எங்களை தங்களுடைய நாடுகளுக்கு பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றன.

கடந்த ஆண்டு நடைபெற்ற உள்ளுராட்சி சபைத் தேர்தல்களில் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் போட்டியிட்டபோது தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவையடுத்து ராஜதந்திரிகளும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் எம்முடன் தொடர்பு கொண்டு தமிழ் மக்கள் என்றும் உங்களுடன் இருக்கிறார்கள் எனக் கூறி பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுக்கள் தமிழ் மக்களுக்கு கிடைத்த பாராட்டாகவே நாம் கருதுகிறோம்.

ஐ.நா.வின் மனித உரிமை தொடர்பாக நடந்த கூட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் சம்பந்தமாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் எவ்வித மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை என உண்மைக்கு மாறான அறிக்கை சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச சட்ட நிபுணர்களின் உதவியுடன் 24 மணி நேரத்துக்கள் உண்மை நிலையினை வெளிப்படுத்தினர். இதன் காரணமாக அரசாங்கத்தையும் நாட்டையும் காட்டிக் கொடுப்பவர்கள் என எம் மீது பேரினவாதிகள் குற்றம் சுமத்தினார்கள்.

அதற்குப் பதிலளித்த எமது தலைவர் சம்பந்தன் ஐயா, உங்கள் அறிக்கையில் உள்ள உண்மைகள் என்ன? எமது அறிக்கையில் உள்ள பொய்கள் என்ன? என வினா எழுப்பியபோது அவர்களால் ஒன்றும் கூற முடியவில்லை.

2009 முள்ளிவாய்க்காலில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஐ.நா. செயலாளரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டாக நாட்டு மக்களின் ஜனநாயக விழுமியங்கள் பேணப்பட வேண்டும், மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பன தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார்கள். இதன் பிரகாரம் அரசாங்கதத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் பேச்சவாத்தைகள் ஆரம்பமாகின.

அந்தப் பேச்சுவார்தையில் அரசதரப்பு, வட – கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரம் தரமுடியாது என அடம்பிடிக்கின்றது. ஆனால் நாம் இவை இல்லாத தீர்வை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்பதை தெளிவாக இறுதியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கூட தெளிவுபடுத்தியுள்ளோம். இந்தப் பேச்சுவார்த்தையை அரசாங்கம் விரும்பவில்லை. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவே எம்முடன் அரசு பேசுகின்றது.

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நமது காணிகள் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளன. எமது மக்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத்தினரால் சூறையாடப்பட்டுள்ளன. எமது மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் இராணுவத்தினர் வைத்துள்ளனர்.

எமது மண்ணில் காணிகள் சுவிகரிக்கப்பட்டுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இவைகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும். புதிய இராணுவ முகாம் அமைப்பதை நிறுத்த வேண்டும். நான் அமைச்சர் தினேஷ் குணவர்தனவை இது தொடர்பில் பல தடவைகள் சந்தித்தேன்.

அவரிடம் இது விடயமாக பல தடவைகள் விவாதித்துள்ளேன். பாராளுமன்றத்தில் உரையாற்றி யுள்ளேன். எங்களுடைய சொந்த மண்ணிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும். அரசியல் தீர்வு விடயத்தில் வடக்கு கிழக்கு இணைந்த மாநில அதிகாரம் மத்திய அரசின் அதிகாரம் போன்ற விடயங்களை தெளிவாக முன்வைத்துள்ளோம். நாங்கள் ஒரு தனியினம். எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை தெளிவாக அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஜனாதிபதியின் காலடியில் சரணடைந்து கொண்டு எமது தலைவர் சம்பந்தனைப்பற்றி விமர்சிக்கின்றனர். சம்பந்தனின் அறிவும் ஆற்றலும் சாணக்கியத்தையும் இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

ஐரோப்பிய விஜயத்தின்போது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் சம்பந்தன் பேசிய பேச்சக்களை அவர்களே பாராட்டினார்கள். இந்நிலையில் சம்பந்தன் ஐயாவை இவர்கள் விமர்சிக்கின்றனர். கிழக்கு மக்களின் பலத்தை நான் அடிக்கடி வடக்கில் பேசுவதுண்டு. கிழக்கு மக்களின் பலம் வடக்கு மக்களுக்குத் தேவையாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் மக்களின் பலமான ஆதரவினை பெற்றள்ளது எனலாம்.

வடக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்வல்களிலும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் அங்கு நின்று எமக்க பாரிய அச்சுறுத்தலை தந்த போதிலும் மக்கள் தமது உரிமைக்காக வாக்களித்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

சிறுகதை

நழுவிச் செல்லும் காற்தடங்கள்

- மண்டூர் அசோகா -

அந்தச் செய்தியை அறிந்த நாளிலிருந்து செல்லமாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கைகால்கள் பரபரக்க என்ன செய்வது, எதைச் செய்வது என்று தெரியாமல் கச்சான் காற்றில் பறக்கும் சருகு போல அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தாள். இரவில் தூக்கம் கூட வர மறுத்தது. மனமெல்லாம் அந்த எண்ணம் ஒன்றே வியாபித்திருந்ததால் அவளுடைய இயல்பான வாழ்க்கை முறையும் மாறிப் போயிருந்தது.

"பாரன் அவட கொண்டாட்டத்த, மகளும் பேரப் பிள்ளையளும் வாறாங்க எண்டு அறிஞ்ச புறகு பறந்துதான் திரியிறாவு..." பக்கத்து வீட்டுக்காரர்களின் கேலிப் பேச்சுக்களும் செல்லமாவுக்குச் சந்தோசத்தையே கொடுத்தன.

இருக்காதா பின்னே, திருமணத்துக்காகப் பத்தொன்பது வயதில் லண்டனுக்குப் பறந்து போன அவளுடைய இளைய மகள் ஏழு வருடங்களுக்குப் பிறகு தன் இரண்டு குழந்தைகளுடன் வரப்போகிறாள். மருமகனுக்கு வர முடியாதாம். அங்கு பெரிய கடையொன்று நடத்துகிறாராம். கடையை யாரிடமும் பொறுப்புக் கொடுத்து விட்டு வரமுடியாதாம்.

மருமகன் வரமாட்டார் என்ற செய்தியால் செல்லம்மா ஏமாந்துதான் போனாள். புகைப்படத்தில் தவிர நேரில் அவள் மருமகனைக் கண்டதில்லை. மகளும் மருமகனும் பேரப் பிள்ளைகளும் ஒன்றாக வந்தால் அவர்களைக் கண் நிறையக் கண்டு களிக்கலாம் என்று எண்ணியிருந்தால் அவள்.

மருமகன் வராவிட்டாலும் மகளும் பிள்ளைகளும்தான் வரப் போகிறார்களே, அவர்களை யார் யாரிடமெல்லாம் காட்ட வேண்டும், எங்கெங்கு கூட்டிப் போக வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டு வைத்திருந்தாள் அவள்.

பேரப் பிள்ளைகள் இருவரும் வெள்ளைக்காரப்பிள்ளைகள் போலத்தான் இருக்கிறார்கள் என்ற பெருமிதம் செல்லமாவுக்கு. மகள் அனுப்பிய புகைப்படங்களை எத்தனை தடைவைகள் பார்த்திருப்பாள், எத்தனை பேரிடம் காட்டியிருப்பாள்.

மூத்த மகளின் பிள்ளைகள் இருவரிடமும் அந்தப் படங்களைக் காட்டுவாள். "இஞ்ச பாருங்கடா, என்ன வடிவா இருக்கானுகள் வெள்ளைக்காரக் குட்டியளப்போல, சித்தியும் புள்ளையளும் இஞ்ச வார நேரம் இப்பிடி ஊத்தைக் காற்சட்டை சேட்டோட நிக்கப்போடா. நல்ல உடுப்புப் போடனும் என்ன?" என்பாள். அவர்கள் இருவரும் அப்பாவித்தனமாகத் தலையாட்டுவார்கள்.

"தம்பியவனுகள் எங்களோட கதைப்பானுகளா அம்மம்மா, விளையாட வருவானுகளா?" என்று ஐந்து வயதுப் பேரன் கேட்பான். மூத்தவன் சற்று விபரம் புரிந்தவன் "அங்கயெல்லாம் இங்கிலிஸ்லதான் கதைப்பாங்க... நம்மளோட கதைக்கத் தமிழ் தெரியோனுமேடா" என்பான். செல்லம்மா பூரித்துப் போவாள். தன்னுடைய பேரப் பிள்ளைகள் இங்கிலிஸ் கதைக்கிறார்கள் என்று.

அவள் வாழும் அந்தக் குக்கிராமத்திலிருந்து இதுவரை எந்தப் பெண்ணும் இப்படி வெளிநாட்டுக்குத் திருமணமாகிச் சென்றதில்லை. ஆண்கள் பலர் உழைப்புக்காகவும் உயிரைக் காக்கவும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டும் போயிருக் கிறார்கள்.

இந்த லண்டன் வாழ்க்கை அவளுடைய மகள் நளாயினிக்கு எதிர் பாராமல் வந்த அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். கிராமத்துப் பாடசாலையில் பதினொராம் வகுப்பு வரை படித்து முடித்து உயர்தரம் படிக்க பக்கத்து ஊர்ப் பாடசாலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள் நளாயினி. அவளுடைய ஊரிலிருந்து ஆண்களும் பெண்களுமாய் பத்துப் பன்னிரண்டுபேர் சைக்கிளில் பாடசாலைக்குப் போய் வருவார்கள். இடையில் அதிரடிப்படை முகாம் ஒன்று இருந்தது. அவர்களுடைய சோதனைச் சாவடியைக் கடந்துதான் இவர்கள் போய் வர வேண்டும்.

நளாயினி துணிச்சல்காரி. அத்தோடு துடுக்குத்தனமும் பார்ப்பவர்களை மீண்டும் ஒரு தடவை திரும்பிப் பார்க்க வைக்கிற அழகும் அவளிடமிருந்தன. இதனை நினைத்துச் செல்லம்மாவுக்குப் பெருமைதான் என்றாலும் மகள் பாடசாலைக்குப் போய் வரும் வரை மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பாள். மகளைப் படிக்க வைத்து அரசாங்க உத்தியோகம் பார்க்க வைக்க வேண்டும் என்ற ஆசை ஒரு புறம், யுத்த சூழலுக்குள் குமர்ப்பிள்ளையான அவளைக் காப்பாற்றி எடுக்க வேண்டுமே என்ற தவிப்பு ஒரு புறமாய் அவள் தத்தளித்துக் கொண்டிருந்தாள். அதற்கு காரணமும் இருந்தது.

செல்லம்மாவுக்குப் பிறந்த மூவரும் பெண்கள். அவளுடைய கணவன் மண்ணை நேசித்து அந்த மண்ணோடு தன் வாழ்வைப் பிணைத்துக் கொண்ட ஏழை விவசாயி. ஆனாலும் இயற்கை விடுக்கும் அத்தனை சவால்களையும் எதிர் கொண்டு அந்த மண்ணோடு உறவாடி அது தரும் வளத்தால் மனைவியையும் மூன்று பெண்களையும் வாழவைத்துக் கொண்டிருந்தவன்.

நளாயினி பிறந்து இரண்டு வயதாயிருக்கையில் வயலுக்குப் போன செல்லம்மாவின் கணவன் உயிரோடு வீடு திரும்பவில்லை. ஏன், எதற்கு என்ற காரணங்கள் ஏதுமில்லாமலேயே அப்பாவி மக்களின் உயிர் குடித்த யுத்தம் அவனுடைய உயிரையும் காவு கொண்டது. உயிரற்ற சடலமாய் அள்ளி வந்து போட்டு ஒப்பாரி வைத்து ஊர் கூடிப் புதைத்ததோடு அவள் கணவனின் கதை முடிந்தது.

செல்லம்மா துவண்டு போகவில்லை. நெருப்புத் தணலை தனக்குள்ளே பத்திரப்படுத்திக் கொண்டு அநாயாசமாய்ப் பூத்துக் கிடக்கும் சாம்பலைப் போல அவள் கணவனின் இழப்பையும் அதனாலுண்டான துயரத்தையும் மனதுக்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள். கணவனுக்குச் சொந்தமாயிருந்த நான்கு ஏக்கர் வயலையும் கூலியாட்களை வைத்து செய்வித்தாள். வீட்டிலேயே முன் விறாந்தையை அடைத்து சிறியதாய் ஒரு சில்லறைக் கடை வைத்தாள். வாரத்தில் ஒரு நாள் பக்கத்து ஊர்ச் சந்தைக்குப் போய் கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவாள்.

அவளுடைய சாமர்த்தியத்தால் மற்றவர்களிடம் கையேந்தாமல் மூன்று பெண்களையும் வளர்த்தெடுத்து படிக்க வைத்தாள். அவளுடைய துணிச்சலையும் முயற்சியையும் கண்டு ஊரே வியந்தது.

மூத்த மகளுக்குத் தன் உறவுக்குள்ளேயே ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்து முடித்து வைத்தாள். இரண்டாமவள் படிப்பில் கவனமில்லாமல் போக்குக்காட்டித் திரிந்தாள். அவளுடைய நடத்தை பிடிக்காமல் செல்லம்மா அவளைக் கண்டிக்கப் போக ஒரு நாள் அவளை இரவோடிரவாய் வீட்டை விட்டே ஓடிப்போய் விட்டாள். கணவன் இறந்த போது கூடக் கலங்காத செல்லம்மா மகளைத் தொலைத்து விட்டு இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள். குமர்ப்பிள்ளை எங்கு போனாளோ என்ன ஆனாளோ என்று தவியாய்த் தவித்தாள்.

எங்கு தேடியும் அவள் அகப்படவேயில்லை. ஆறேழு மாதங்களுக்குப்பின் அவள் யாரோ ஒரு பொலிஸ்காரனோடு ஓடிப்போய் விட்டதாக அவளுக்கு யாரோ சொன்னார்கள். அன்றே அவளுக்குத் தலைமுழுகிக் கழித்து விட்டாள் செல்லம்மா. என்றாலும் அவளால் இந்த இழப்பிலும் அவமானத்திலுமிருந்து இலகுவில் மீண்டுவர முடியாமலிருந்தது. தனது சில்லறைக் கடையைக்கூடக் கவனிக்காமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தாள்.

அவளுக்கு வாடிக்கையாகக் கடைக்கு வேண்டிய பொருட்களைக் கொடுக்கும் முதலாளி தருமலிங்கம் ஒருநாள் அவளுடைய வீட்டுக்கு வந்திருந்தார். அவருடைய மகளின் திருமண விருந்துக்கு ஆட்டுக்கடா வாங்கவென்று வந்தவர் நளாயினியைக் கண்டு அவளைப்பற்றி விசாரித்துக் கொண்டு போனார். அடுத்த வாரம் செல்லம்மா சந்தைக்குப் போயிருந்த போது அவர் அந்த நல்ல செய்தியை அவளிடம் சொல்லி முடிவு கேட்டார்.

லண்டனில் இருக்கும் அவருடைய மைத்துனனுக்குப் பெண் தேடிக் கொண்டிருக்கிறார்களாம். அழகான வயது குறைந்த பெண் தான் வேண்டுமாம். நளாயினியை லண்டனுக்கு அனுப்ப விருப்பமா என்று கேட்டார்.

இரண்டாவது மகள் ஏற்படுத்தி விட்டுப் போன அவமானத்தால் நொந்து போயிருந்த செல்லம்மா இளைய மகள் நளாயினியை வைத்துப் பாதுகாத்து எடுப்பது எப்படி என்று கலங்கிக்கொண்டிருந்தவள் எதையும் யோசிக்காமல் சம்மதம் தெரிவித்து விட்டு வந்தாள். இளைய மகளைப் படிப்பித்து அரசாங்க உத்தியோகம் பார்க்க வைக்க வேண்டும், தானும் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்று கனவுகளை வளர்த்தவள் தான் அவள். ஆனால் கொந்தளித்துப் போயிருந்த நாட்டுச் சூழலும் அதனால் ஏற்பட்டுப்போயிருந்த இழப்புக்களும் அவளை இந்த முடிவுக்கு அழைத்துச் சென்றன.

அதன் பின் எல்லாமே நல்ல படியாக நடந்தன. தருமலிங்கமே முன்னின்று பாஸ்போர்ட் அலுவல்கள், விசா பெறுவது என்றும் ஏஜென்சி தொடர்பு, பணம் ஒழுங்கு பண்ணுவது என்றும் சகலதுக்குமாக கொழும்புக்கும் அவள் வீட்டுக்குமாக அலைந்து திரிந்து நளாயினியை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். அங்கேயே அவளின் திருமணமும் நடந்தது. செல்லம்மாவிடம் அவர்கள் சீதனம் என்று எதுவும் கேட்கா விட்டாலும் நளாயினியை அனுப்புவதற்காக அவர்கள் செலவு செய்த வகையில் என்று தன்னுடைய வயலில் இரண்டு ஏக்கரை விற்று அந்தப் பணத்தை தருமலிங்கத்திடம் கொடுத்தாள். மிகுதி இரண்டு ஏக்கரையும் மூத்த மகளுக்கு கையளித்து விட்டு தன்னுடைய சில்லறைக்கடையை நம்பி காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

எல்லாம் நடந்து ஏழு வருடங்கள் ஓடிவிட்டன. அடிக்கடி மகள் அவளுக்கு கடிதங்கள், புகைப்படங்கள் அனுப்புவாள். ஊர்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் வீட்டில் மட்டும் தான் தொலைபேசி இருந்தது. அங்கு செல்லம்மாவை அழைத்து கதைப்பாள் நளாயினி. இப்போ இரண்டு வருடங்களாய் செல்லம்மா வீட்டிற்கும் தொலைபேசி இணைப்புக் கிடைத்தது. அடிக்கடி மகளுடன் கதைத்துக கொண்டிருக்கிறாள். கடந்த வாரம்தான் நளாயினி திடீரென்று ஊருக்க வர இருக்கும் செய்தியைச் சொன்னாள். அன்றிலிருந்து செல்லம்மா சந்தோசத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

மகளுக்கு என்னென்ன பிடிக்கும் என்று நினைத்து நினைத்து ஒவ்வொன்றாய்த் தேடித் தேடி சேகரித்தாள். உறைப்பு முறுக்கு அவளுக்குப் பிடிக்கும் என்று உழுந்து வாங்கி வறுத்து அரைத்து உழுந்துமாவும் அரிசி மாவும் தூளும் சேர்த்து உழுந்து முறுக்கு சுட்டு வைத்தாள். வள்ளிக் கிழங்குக் கூழ் விரும்பிச் சாப்பிடுவாள் நளாயினி. மூத்த மருமகனிடம் சொல்லி வள்ளிக் கிழங்கு வாங்கி வைத்தாள். பேரப் பிள்ளைகளுக்கென்று பயற்றம் உருண்டை, லட்டு என்று பார்த்துப் பார்த்து செய்தாள்.

மூத்த மகளும் அவளுமாகச் சேர்ந்து வீடு வாசல் எல்லாம் துப்பரவாக்கி மகளும் பேரப் பிள்ளைகளும் தங்குவதற்கென்று ஒரு அறையை ஒதுக்கி வைத்தார்கள். அவளுடைய வீடு சிறிய வீடுதான். ஆக இரண்டு அறைகளும் மண்டபமும் ஒரு விறாந்தையும் கொண்டது. விறாந்தையில் அவளுடைய சில்லறைக் கடை இருந்தது. மகள் வந்து போகும் வரை கடையைத் திறப்பதில்லை என்று முடிவு பண்ணியிருந்தாள் அவள். வாடிக்கையாளர்களிடமும் சொல்லி வைத்திருந்தாள்.

மகள் வருவதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. அவளை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் பற்றி கதைப்பதற்காக தருமலிங்கம் வீட்டிற்கு போனாள் செல்லம்மா. "வேன் ஒன்று ஒழுங்கு பண்ணியிருக்கிறம். நீங்க என்னத்துக்கு சும்மா வந்து கஷ்டப்படபோறீங்க, நானும் மனுசியும் போய்க் கூட்டிவாறம் செல்லம்மா" என்ற தருமலிங்கத்தின் வார்த்தைகளால் திகைத்துப் போனாள் செல்லம்மா. 'என்ட மகளை கூட்டிவரப் போறது எனக்கு கஷ்டம் என்றா நினைக்கிறயள்?' என்று கேட்க நினைத்தவள் சிரமப்பட்டு தன்னை கட்டுப் படுத்திக் கொண்டாள். தான் ஏதாவது கதைக்கப்போக அதனால் மகளின் வாழ்க்கையில் ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டு விடுமோ என்ற அப்பாவித்தனமான அச்சம் அவளது வாய்க்கு பூட்டுப் போட்டது.

வீடு வந்து மூத்த மகளிடம் தனது ஆற்றாமையைச் சொல்லிப் புலம்பினாள். "சித்தியும் தம்பியாக்களும் இஞ்ச வரமாட்டாங்களா அம்மம்மா?" என்று கேட்ட பேரக் குழந்தைகளை பாசத்தோடு அணைத்துக் கொண்டாள் செல்லம்மா.

மகள் வருவதாகச் சொன்ன அந்த பதினைந்தாம் திகதி செல்லம்மா இரவிரவாய் தூக்கமில்லாமல் புரண்டாள். ஆண் துணை இல்லாமல் தன்னுடைய உயிராய் நினைத்து உருகி உருகி வளர்த்த மகள். ஏழு வருடங்களுக்குப் பின் காணப் போகிறோம் என்ற எண்ணமே அவளுடைய தூக்கத்தை விரட்டியிருந்தது. பேரக் குழந்தைகள் தன்னைக் கண்டதும் கதை கேட்க வேண்டும், தாலாட்டுப் பாடி தூங்க வைக்க வேண்டும் என்றென்று எத்தனை கற்பனைகள், கனவுகள்.

விடிகாலைச் சேவல் கூவுவதற்கு முன்னமே படுக்கையைச் சுருட்டி வைத்து விட்டு

எழுந்த செல்லம்மா வெளியே வந்தாள். இருள் பிரியாத அதிகாலை. காகங்கள் கூட கூடுகளை விட்டு வெளியே வரவில்லை. இரவு தூறிச் சென்ற மழை முற்றத்து மணலையும் செடி கொடிகளையும் நனைத்து விட்டிருந்தது.

'நளாயினி பள்ளியில படிக்கிற காலத்திலையும் இப்படித்தானே விடிய முந்தி எழும்பி சாப்பாடு செய்து கட்டிக் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்புவன்' அவள் மனதில் பழைய நினைவுகள் துளிர் விடத் தொடங்கின.

பரபரவென்று முற்றம் கூட்டி, சட்டி பானைகள் கழுவி காலை நேரத்து

17ம் பக்கம் பார்க்க.....

இம்மாத இராசிப்பலன்கள்

2012 தை மாதப் பலா பலன்கள்

பன்னிரெண்டு இராசிகளுக்கும் உரியவை.

தைமாதம் இடபம், கர்க்கடகம், கன்னி, விருட்சிகம் கும்பம் இராசிகளுக்கு சமனான பலன்களையும், மிதுனம், சிங்கம், துலம், தனு, மகரம், மீனம் இராசியினருக்கு சிறந்த பலன்களையும் தரக் கூடியதாக அமையும். 1, 5, 10, 14, 19, 23, 28 எண்களில் பிறந்தவர்கள் நன்மையடைவர்.

மேடம்: அச்சுவினி, பரணி, காத்திகை முதலாம் பாதம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தை மாதம் செய் தொழில்களில் சிறிது தளம்பலை ஏற்படுத்தும். பணவிடயங்களில் அவதானமாக நடந்து கொள்வது நல்லது. எதிர் பார்த்த பல கருமங்கள் மாத இறுதியில் நிறைவேறும். குடும்பத்தில் சுபகருமங்களுக்கான அடித்தளங்கள் இடப்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடந்தேறும். உத்தியோஸ்தர்களில் பலர் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாவதுடன், பதவி உயர்வுகளையும் எதிர் கொள்ள நேரிடும். மாணவர்கள் கல்வியில் மாற்றங்களை எதிர் கொள்ள நேரிடும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய முதலீடுகளை தவிர்த்து நடந்து கொள்வது நல்லது. வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் சிறப்பாக உள்ளதால் தீமைகள் பெரும்பாலும் ஏற்பட வாய்ப்பில்லை. அதிஷ்ட திகதிகள் 5, 14, 23 இதில் எக்கருமம் செய்கினும் வெற்றியுண்டாகும்.

இடபம்: கார்த்திகை பின் முக்கால், ரோகிணி மிருக சீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்த இடப இராசியினருக்கு வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் சுமாராக உள்ளதால் பல விடயங்களிலும் அவதானமாக நடந்து கொள்வது நல்லது. தொழில் நிலைகள் சீராக அமையாது. மனச் சஞ்சலம் தரும். பண விடயங்களில் தடைகள் உருவாகும். கடன் படும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக் கஷ்டங்கள் மறையும். சுப காரியங்கள் நிறைவேறும். உத்தியோஸ்த்தர்களுக்கு இதுவரை இருந்து வந்த தொல்லைகள் நீங்கும். பதவிகளில் மாற்றம் ஏற்படும். அரசியலில் உள்ளவர்கள், அற்ப சலுகைகளால் மனக் குமுறல்களுக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் எதிர் நோக்கிய கஷ்டங்கள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கூடிய கவனமெடுத்தால் நன்மை ஏற்பட வாய்ப்புண்டு. அதிஷ்ட திகதிகள் 3, 9, 18 இத்திகதிகளில் எக்கருமம் செய்கினும் வெற்றி கிடைக்கும்.

மிதுனம்: மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர் பூசத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சுகம் நிறைவாக இருந்தாலும் மற்றக் கிரகங்களின் பார்வைகள் சுபமாக உள்ளதால் நன்மையும் தீமையும் கலந்த மாதமாக அமைந்திடும். செய் தொழில்களில் பல சிரமங்களின் மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். பண விடயங்களில் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. காரியங்களில் வீண் தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் காரியங்கள் நிறைவேறி மனத்திருப்தி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவியுயர்வுகள் சிரமங்களின் மத்தியில் வந்து சேரும். அரசியலில் உள்ளவர்கள் மன ஆறுதலடைவர். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சியுடன் செயற்பட்டால் சிறந்த பேற்றினைப் பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் இலாபமடைவர். மிதுன இராசியினருக்கு சிறப்பு தரும் மாதமாகும். அதிஷ்ட திகதிகள் 4, 22 ஆகும்.

கர்க்கடகம்: புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சுகமும், மற்ற கிரகங்களின் அனு கூலமும் உள்ளதால் செய் தொழில் விருத்தியும் எதிர் பார்த்த பண வரவுகளையும் பெறுவர். புதிய முயற்சிகளை தாராளமாக தொடங்க வாய்ப்புண்டாகும். குடும்பத்தில் பல திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறும். திருமணமாகாதவர்கள், காதலர்கள் திருமண வாய்ப்பினைப் பெறுவர். உத்தியோஸ்த்தர்களுக்கு இருந்து வந்த கஷ்டங்கள் மறைந்து முன்னேற்றம் ஏற்படும். அரசியலில் உள்ளோர் சிறந்த பதவிகளைப் பெறுவர். மாணவர்கள் எதிர்பார்த்த கல்வி கிடைப்பதுடன் சிலர் வெளிநாட்டு கல்வியினையும் பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் எதிர்பார்த்த இலாபத்தினைப் பெற்று முன்னேற்றம் காண்பர். கர்க்கடக இராசியினருக்கு கவலையற்ற மாதமாக அமையும். அதிஷ்ட திகதிகள் 7, 16 ஆகும்.

சிங்கம்: மகரம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் ஒன்பதிலும், சனி 3 ஆம் சூத்திரம், இராகு கேது பார்வைகள் மத்திமமாக அமைந்தாலும் தெசா புத்தி சிறப்பாக இருந்தால் எந்தவித தீமையும் ஏற்படுத்தாது. செய் தொழில்கள் சீராக அமையாததால் அடிக்கடி மனக் கவலைகள் ஏற்பட்டு மறையும். புதிய முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டு பின்னர் முயற்சி பலிதமாகும். கொடுக்கல் வாங்கல்களிலும் , தேக சுகத்திலும் அவதானத்துடன் இருப்பது நன்மைதரும். குடும்பத்தில் சிறிது பிரச்சனைகள் தோன்றும். பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. சுபகாரியங்களில் மிகவும் அவதானமாக இருப்பதுடன் எதையும் தள்ளி வைக்காமல் நிறைவேற்றுவது நன்மையைக் கொடுக்கும். உத்தியோகஸ்த்தர்களுக்கு திடீர் இடமாற்றம், மேலதிகாரிகளினால் தொல்லை, மனக் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அரசியலில் உள்ளவர்கள் அல்லல்படுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமும், முயற்சியும் எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளை அளவுடன் வைத்து கண்காணிப்பது நன்மையைத் தரும். அதிஷ்ட திகதிகள் 6, 15, 24 ஆகும்.

கன்னி: உத்தரத்து பின் முக்கால், அத்தமி, சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சுபம் இருந்தாலும், ஏழரைச்சனி கடக்கூறும், ஜென்ம சனியும் மாறியுள்ளதால் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. தொழில் நிலைகளில் எதிர்பார்த்த நன்மைகள் வந்து சேரும். கருமங்களில் வீணான தடைகள் ஏற்பட்டு மனக்கவலைகள் தரும். பணவரவுகள் சீராக அமையாததால் இடையிடை கடன்படும் நிலைக்கு சிலர் தள்ளப்படுவர். குடும்பத்தில் சுபகாரிய நன்மைகளுக்காக செலவுகள் ஏற்படும். உத்தியோகஸ்த்தர்களுக்கு திடீர் இடமாற்றங்களும், பதவிகளில் மாற்றங்களும் ஏற்படும். அரசியலில் உள்ளவர்கள் ஆழமாக சிந்தித்து முடிவுகளை எடுப்பது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் நல்ல முயற்சி எடுத்தால் சிறந்த பலாபலன்களை பெறமுடியும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டால் இலாபத்தினை பெறமுடியும். அதிஷ்ட திகதிகள் 2, 20 ஆகும்.

துலாம்: சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, வியாழன் சுகக் குறைவுடன் ஏழரைச் சனி நடுகூறு நடைபெறுவதால் இம்மாத பிற் பகுதிவரை சகல விடயங்களிலும் அவதானத்துடன் இருப்பதுடன் தேக சுகத்திலும் கவனமுடன் இருப்பது நன்மையைத் தரும். செய் தொழிலில் முன்னேற்றம் சிறிதளவு ஏற்படும். பண விடயங்கள் எதிர் பார்த்தபடி அமையாது. குடும்பத்தில் அடிக்கடி பிள்ளைகளால் மனக்கவலைகள் ஏற்பட்டு மறையும். சுப கருமங்களுக்கான அடித்தளங்கள் இடப்படும். உத்தியோகஸ்த்தர்களுக்கு எதிர்பார்த்த நன்மைகள் வந்து சேரும். மேலதிகாரிகளுடன் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. அரசியலில் உள்ளோர் மனக் குறைகளுக்கு ஆளாகுவர். சிலருக்கு பதவிகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. மாணவர்கள் கல்வி உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் ஆதாயமடைவர். அதிஷ்ட திகதிகள் 5, 14, 23 ஆகும்.

விருட்சிகம்: விசாகத்து 4 ஆம் கால் அனுசம், கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் 6 ஆம் வீட்டிலும், சனி, ராகு, கேது சுபஸ்த்தானத்திலும் அமைவதால் இந்த மாதம் யோகம் நிறைந்த மாதமாக அமைந்திருக்கும். செய்தொழில் நன்மையும், போதிய பண வரவுகளும் ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வந்து சேரும். மனதிற்கினிய இடமாற்றங்களும் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்கள் மனக் கவலைகளில் இருந்து விடுபடுவர். மாணவர்கள் கல்வியில் சிறப்படைவதுடன் பரீட்சைகளிலும் வெற்றி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் இலாபம் அடைவதுடன் புதிய முயற்சிகளிலும் காலடி வைத்து வெற்றி காண்பர். அதிஷ்ட திகதிகள் 1, 10, 19 ஆகும்.

தனு: மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, ராகு, கேது பார்வைகள் சுமாராக உள்ளதால் சகல விடயங்களிலும் அவதானத்துடன் நடந்து திட்டமிட்டு கருமமாற்றினால் வெற்றியடைவர். செய் தொழிலில் இடையிடை சிக்கல்கள் தோன்றி மறையும். எதிர் பார்த்த பண வரவுகளில் தாமதங்கள் ஏற்பட்டாலும் பின் பணம் வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக்கவலைகள் மறைந்து, சந்தோசம் நிலவும். சுபகாரிய நன்மைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடக்காவிட்டால் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை உண்டாகும். அரசியலில் உள்ளோர் மனக்குறைகளுடன் காலம் தள்ளுவர். மாணவர்கள் உரிய கல்வியினை பெற்றுக் கொள்வர். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் திட்டமிட்டு காரியமாற்றுவது நன்மை தரும். அதிஷ்ட திகதிகள் 3, 12, 21 ஆகும்.

மகரம்: உத்தராடத்து பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் 4 ஆம் வீட்டிலும் சனி, ராகு, கேது பார்வைகள் நன்மைக்குரியதாக அமைவதால் இம்மாதம் நன்மையும் தீமையும் கலந்த பலன்களை தரும். செய்தொழில்களில் இடையிடை சிக்கல்கள் தோன்றும். பணவரவுகள் திருப்தி தரக் கூடியதாக அமையும். தேக சுகத்தில் கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் தேவையில்லாத பிரச்சனைகளால் மனக் கவலைகள் உருவாகும். திட்டமிட்ட சுபகருமங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்களுக்கு திடீர் இடமாற்றங்களும் பதவி மாற்றங்களும் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்கள் பதவிகளில் இருந்து விலக அல்லது விலக்கப்பட வாய்ப்புண்டாகும். மாணவர்கள் கல்வி நிலையில் தளம்பல் ஏற்பட்டு சீராகும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளை அளவுடன் வைத்துக் கொண்டு மேற்பார்வை செய்வது நன்மை தரும். அதிஷ்ட திகதிகள் 10, 14, 28 ஆகும்.

கும்பம்: அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு அட்டமச் சனி முடிவுற்று வியாழன் சுபஸ்த்தானமும், ராகு, கேது பார்வைகள் நன்மை பொருந்தியும் உள்ளதால் சகல விடயங்களையும் திட்டமிட்டுச் செய்தால் நல்ல பலாபலன்களை பெற முடியும்.

மீனம்: பூரட்டாதி நாலாம் உத்தரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சுகமும், ராகு, கேது, சனி பார்வைகளும் நன்மை தரக் கூடிய மாதமாக இம்மாதம் அமையும். செய்தொழில்கள் யாவும் திருப்திகரமாக அமைவதுடன், எதிர் பார்த்த பணவரவுகளும் வந்து சேரும். அட்டமத்து சனியென்று கலங்கிடாமல் சகல விடயங்களையும் திட்டமிட்டுச் செய்தால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்கள் மன நிறைவுடன் கருமமாற்றுவர். சிலருக்கு பதவிகளில் மாற்றம் ஏற்படும். அரசியலில் உள்ளவர்களுக்கு மனக் குழப்பங்கள் ஏற்படுவதுடன் பதவிகளை துறக்கவும் இடமளிக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுக்காவிடில் பரீட்சைகளில் தோல்வியை தழுவ நேரிடும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய முதலீடுகளை தவிர்த்து அளவுடன் முதலீடுகளை வைத்திருப்பது நன்மை தரும். அதிஷ்ட திகதிகள் 1, 10, 19 இதில் எக்கருமம் செய்கினும் வெற்றி உண்டு.

கிரக நிலை எண்முறைகளுடன் கூடிய ஒப்பீடு

செய் தொழில் விருத்தியும், உரிய பண வரவுகளும் கிடைத்திடும். எதிர் பார்த்த பல கருமங்களில் முன்னேற்றம் காணும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். எதிர் பார்த்த சுப கருமங்கள் நடந்தேறிட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு இருந்து வந்த தொல்லைகள் மறையும். பதவி உயர்வுகள் வந்து சேரும். அரசியலில் உள்ளவர்கள் மனக்குளப்பங்களிலிருந்து விடுபடுவர். புதிய பதவிகள் சிலருக்கு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி நிலையில் மாற்றமும், உயர்ச்சியும் வெளி நாட்டுக் கல்வியும் கிடைத்திடும். விவசாயிகள் வியாபாரிகள் முதலீடுகளால் இலாபமடைவர். அதிஸ்ட திகதிகள் 10,19,23 ஆகும்.

சோதிடமாமணி எஸ். தெய்வநாயகம்,
கனகாலயம், 5 ஆம் குறிச்சி, ஏறாவூர்,
செங்கலடி, இலங்கை.
தொலை பேசி எண் - 065-2241342















மட்டக்களப்பு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் விருது 2011 வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மஹாஜன கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. அதன்போது இடம்பெற்ற சில நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

ஹரி சிறுவர் இல்லத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு.








மட்டக்களப்பு ஹரி சிறுவர் இல்லத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாராட்டும் நிகழ்வு ஹரி இல்லத்தில் நடைபெற்ற போது சுவாமி யோகிராஜானந்தா மங்களவிளக்கேற்றுவதையும் பிரதேச செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா சிவானந்தா தேசிய பாடசாலை அதிபர் தெ.ரவீந்திரமூர்த்தி ஆகியோர் உரையாற்றுவதையும் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஏ.நிமல்ராஜ், யாழ்.முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பி.நிதர்சன் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் ஹரி இல்லத்தலைவர் ச.சந்திரகுமார் அருகில் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

♦மட்டக்களப்பு ஹரி சிறுவர் இல்லத்திற்கு chiDAES கனடா அமைப்பினர் நிதியுதவி அளிப்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களே!



உங்களுக்கு விருந்தளிக்கவும் களம் அமைத்து தரவும் ஆதவன் ஆயத்தமாக உள்ளான். உங்கள் ஆக்கங்களை விரைந்து அனுப்பி வையுங்கள்! அடுத்த கதிரில் படித்து சுவையுங்கள்!!


அனைவருக்கும் இனிய
தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
தமிழன்
வழிகாட்டி
www.tamilsguide.com 416-615-4646

பரந்தன் இரசாயன தொழிற்சாலையை அதே இடத்தில் புனரமைக்க திட்டம்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் அதே இடத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதற்கான திட்ட அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு 3 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 217 ஏக்கர் நிலப்பரப்பில் முன்னர் தொழிற்சாலை இயங்கிய அதே இடத்தில் மீண்டும் தொழிற் சாலை புனரமைக்கப படவுள்ளது. இந்தியா, அயர்லாந்து, டுபாய் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இதற்கு முன்வந்துள்ளனர். பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இத் தொழிற்சாலை மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.


வருடாந்தம் 2000 மெட்ரிக் தொன் குளோரினுக்கும் 15000 மெட்ரிக் தொன் கஸ்ரிக் சோடாவுக்கும் நாட்டில் தேவை உள்ளது. இத் தொழிற்சாலை புனரமைக்கப்பட்டதும் தினமும் 25 தொன் குளோரினும் கஸ்ரிக் சோடாவும் உற்பத்தி செய்யப்படும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.






மட்டக்களப்பு - காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இலங்கையின் 6வது தேசிய பாதுகாப்புத்தின நிகழ்வின் போது இடம்பெற்ற சில நிகழ்வுகளை




சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவாளர் தின விழா நிகழ்வுகள் சிலவற்றை படங்களில் காணலாம்.

ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு கிழக்கிலங்கை நாவல்களின் பங்களிப்பு

மேனாட்டிலக்கியத்தின் உரைநடை வடிவங்களுள் ஒன்றான நாவல் தமிழில் 1879 இல் மயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முவலியார் சரித்திரத்துடன் தொடங்குகின்றது. அதேபோல் ஈழத்தில் தமிழ் நாவல் 1885 இல் சித்திலெவ்வையின் அசன்பேயின் சரித்திரத்துடன் தொடங்குகின்றது. கிழக்கின் முதல் நாவல் திருகோணமலையிலிருந்து 1891 இல் எஸ். இன்னாசித்தம்பியின் ஊசோன் பாலந்தை கதையுடனும் மட்டக்களப்பின் முதல் நாவல' எம். பி.முகமது ஜலீலின் ஒரு வெள்ளைப் பூ சிரிக்கிறது நாவலுடனும் தொடங்குகின்றது.

பொதுவாக ஈழத்து நாவல்கள் கொண்டிருந்த வகைமாதிரியான போக்குகளையே கிழக்கிலங்கை நாவல்கள் கொண்டிருப்பினும் தழுவல், வரலாறு, துப்பறியும் மர்மம், பெண்விடுதலை, தேசிய இனப்பிரச்சனை, குடும்பம், சாதி ஏற்றத்தாழ்வு, சீதனக்கொடுமை, புகலிட இலக்கியம், போர்கால இலக்கியம், பிரதேச மண்வாசனை இலக்கியம் எனும் வகையிலேயே கிழக்கிலங்கை நாவல்கள் வேறுபட்டு நிற்கின்றன.

கிழக்கிலங்கையின் ஆரம்பகால நாவல்களான ஊசோன் பாலந்தகதை, அரங்க நாயகி என்பன மேலைத்தேய கதைகளைத் தழுவி எழுந்தவைகளாகும். இது பொதுவாக ஆரம்பகால ஈழத்து நாவல்களுக்கு பொதுவானது. இவ்வகைப் போக்கு அத்துடன் நின்று விட 1895 இல் திருமலையிலிருந்து வெளிவந்த தி.த. சரவணமுத்துபிள்ளையின் மோகனாங்கி தமிழ் நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பிரதேசங்களில் நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்த 17 ஆம் நூற்றாண்டு காலத்தில் இரு நகரங்களிலும் ஆட்சி புரிந்தவர்களிடையே நிகழ்ந்த அரசியல் போட்டியின் பகைப்புலத்தில் காதல், வீரம், சூழ்ச்சி முதலிய சம்பவங்களைக் கொண்டு வரலாற்று நாவல்களைப் புனைந்துள்ளனர்.

முதல் வரலாற்று நாவல் எனும் பெருமையைப் பெறுகின்றது களம். தமிழ் நாடாக இருப்பினும் ஈழத்து பேச்சு வழக்கு ஆங்காங்கே காணப்படுகின்றது. இவ்வாறு ஈழத்தில் முதல் வரலாற்று நாவலாக வெளிவந்த மோகனாங்கியைத் தொடர்ந்து கிழக்கிலங்கையில் பல வரலாற்று நாவல்கள் வெளிவர வழி வகுத்தது.

பிரமிளின் லங்காராஜா, க.தா.செல்வஇராஜகோபாலின் யாரிந்த வேடர்? வ.அ. இராசரெத்தினத்தின் கிரௌஞ்சப் பறவை, அருள் செல்வநாயகத்தின் பாசக்குரல், வாள்முனை வாழ்வு, வாகரை வாணனின் நந்திக்கொடி என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைவிட பிரதேசப் பண்புகள் என்ற வகைக்குள் வரும் நாவல்கள் பலவற்றில் வரலாற்றுப் போக்கு கொண்ட தன்மையுள்ள நாவல்கள் பலவற்றையும் காணலாம்.

இதில் லங்காராஜா எல்லாளன் அரசனின் கதையை மையமாகக் கொண்டும் யாரிந்த வேடர்? மகாவம்சத்தையும் மேலும் சில வரலாற்று மூலகங்களையும் அடிப்படையாக கொண்டும் பாசக் குரல் (1963) சோழப்பெருமன்னர் ஈழத்தில் வெற்றிபெற்று ஆட்சி செலுத்திய 11 ஆம் நூற்றாண்டு ஆட்சி பகைப்புலத்தின் அரசியற் தொடர்புகளையும் காதலையும் புனைந்து மர்மக் கதைப் பாணியில் எழுதப்பட்டன. கிரௌஞ்சப் பறவை 237 ம் ஆண்டு சூரதீசனின் ஆட்சிக்கால பகைப்புலத்தில் காதல், அரசுரிமை சூழ்ச்சி ஆகியவற்றை இணைத்து பண்பாட்டு பகைப்புலத்தை வரலாற்றுக்கு முரண்படாத வகையில் படைக்கப்பட்டுள்ளது. வாகரை வாணனின் நந்திக் கொடி குறு நாவலாயினும் சோழர் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய கால நிகழ்வு எனினும் சமகால நிகழ்வுகளை பேசிச் செல்லும் ஒரு வரலாற்று நவீனம்.

இவ்வாறு கிழக்கிலங்கையின் வரலாற்று நாவல்களின் போக்கு தொடர்ச்சியாகவும் விட்டுவிட்டும் வெளிவந்த வண்ணமுள்ளன. இன்னுமொரு வகை பாலியல் சார்ந்த நாவல்கள் இம் மண்ணில் தோன்றியுள்ளன. இவ்வகையில் நவத்தின் அழகு சுடும், உமா வரதராஜனின் மூன்றாவது சிலுவை, தமிழ் நதியின் கானல்வரி, அருள்சுப்பிரமணியத்தின் நான் கெடமாட்டேன் பாடுகள் பற்றியும் நமது ஒழுக்க விழுமியங்களை பரிசீலனைக்கு உள்ளாக்கும் வகையிலும் மனித நடத்தை வேறுபாடுகளை ஆராயும் வகையிலும் பாலியல் உறவுகள் அதில் முக்கியத்துவம் பெறுகின்றன. தனி மனித உணர்வு முதன்மை பெறுகிறது.

பொதுவாக இந் நாவல்களின் நடைப் போக்கு சற்று வித்தியாசமானது. அழகு சுடும் நாவல் ஒரு வகையென்றால் மூன்றாவது சிலுவை இன்னுமொருவகை ஆணாதிக்க சிந்தனையின் வெளிப்பாடும் தூக்கலாக தெரிகின்றது. நவீன சொல்லாலடோடும் தேவையான சிக்கனமான விபரங்களோடும் நகர்த்தப்படுகின்றது. எனினும் அரசனின் வருகையைத் தந்த உமா வரதராஜனிடமிருந்து மூன்றாவது சிலுவையை எதிர்பார்க்கவில்லை. இதனைவிட மேலானதொரு படைப்பையே எதிர் பார்த்தோம். ஏமாற்றமே. தமிழ் நதியின் கானல்வரி நாவலும் இவ்வாறானதொரு வகையாகும் எனினும் பார்வைக்கு கிடைக்கவில்லை.

மர்மப் பண்பு வாய்ந்த துப்பறியும் தன்மை கொண்ட மூன்றாம் தர வகையாக கொள்ளப்படத்தக்க சில நாவல்களும் வெளிவந்தன. மர்ம மாளிகை, நிழல் மனிதன் போன்றவை இத்தன்மை வாய்ந்தனவாகும்.

நாட்டில் ஏற்பட்ட இன முரன்பாடுகள் தேசிய இனப்பிரச்சனையாக உருக்கொண்டு பல்வேறு பிரச்சனைகளைத் தோற்றுவித்தது. அதன் அழிவுகளும் துன்பங்களும் துயரங்களும் அழியாத வடுக்களாகிப் போனமை வரலாறு. இதனை மையமாகக் கொண்டு இங்கும் பல நாவல்கள் தோற்றம் பெற்றன. ஆனால் அவை சரியாக அதனை வெளிக் கொணர்ந்தனவா என்பது கேள்விக்குறி.

ஓ.கே. குணநாதனின் ஆடித்தீ ஆ.மு.சி. வேலழகனின் கோடாமை சான்றோர் கணி, விமல் குழந்தை வேலின் மண்ணும் மல்லிகையும், செ. குணரெத்தினத்தின் துன்ப அலைகள் போன்றவை. ஆனால் இவைகள் தேசிய இனப்பிரச்சனைகளை பேச முற்பட்ட நாவல்களாகும்.

இவ்வகையில் இருவகை நாவல்களைப் பற்றி முக்கியமாக குறிப்பிட வேண்டும். ஒன்று கோவிந்தனின் புதியதோர் உலகம் செய்வோம். மற்றையது தூயவனின் இன்னொரு போர் முகம். அரசியல் நாவல் எனும் போது பொதுவாக தமிழர்களின் அரசியல் பேசுவதே வழமை. ஆனால் இந்நாவல் விடுதலைக்காக புறப்பட்ட இயக்கங்களின் உள்ளே நிகழ்ந்த உட்கட்சி முரண்பாட்டை பதிவு செய்கிறது. கிழக்கு என்பதை விட ஈழத்து நாவல் உலகில் முக்கியமானதொரு இடத்தை இந் நாவல் பெறுகின்றது.

மற்றையது தூயவனின் இன்னொரு போர் முகம். போர்க்கால இலக்கியங்கள் பலவும் வன்னியை மையமாகக் கொண்டே படைக்கப்பட்டன. ஆனால் இது திருமலை சீனன் குடா விமான நிலையத் தாக்குதலை மையமாக கொண்ட ஒரு உண்மைச் சம்பவம் நவீனமாக்கப்பட்டள்ளது. இதன் ஆசிரியர் தூயவன் ஒரு போராளி. இவர் திருமலையை சேர்ந்தவரா என்பது தெரியவில்லை. இதனை ஒரு நாவலாக ஏற்றுக் கொள்ளாதோரும் உள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிச் சமர் பற்றி பல்வேறு குரல்களும் சர்வதேசம் வரை ஒலிக்கின்ற இவ்வேளையில் கிழக்கிலிருந்து எஸ்.அரசரெத்தினம் எனும் படைப்பாளி சாம்பல் பறவை எனும் குறு நாவலாக படைத்துள்ளார். வன்னி மக்களின் உண்மையான உழைப்பும் அவர் தம் போராட்டமும் வெறும் சாம்லாகாமல் கோரைப் புல்லாக மீண்டும் மீண்டும் முளைத்து எதிர்கால சந்ததியினருக்கு சாட்சியாகப் பகிர இதனை பதிவு செய்ததாக கூறுகின்றார்.

இனி காலத்திற்கு காலம் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களின் தாக்கங்களுக்குட்பட்டு அவற்றை பிரதிபலிக்கும் வகையில் சாதாரன மனித வாழ்க்கைப் பிரச்சனைகளை சித்தரிக்கும் சமூக நாவலாக பரிணமித்துள்ளமையை நாம் பார்க்கலாம்.

அவ்வகையில் கிழக்கின் பெரும்பாலான நாவல்கள் கிழக்கின் ஏதோ ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களின் பண்பாட்டு பழக்கவழக்கங்கள், பாரம்பரிய நடத்தை, அவர்களின் சமகால வாழ்க்கைப் பிரச்சனைகள், அனுபவங்கள் என்பவைகளை அவர்களின் பேச்சு மொழியில் சித்தரிக்கும் நாவல்களாக திகழ்கின்றது.

இவ்வகையில் செ. குணரெத்தினத்தின் துன்ப அலைகள், தெய்வ தரிசனம், ஒரு கிராமம் தலை நிமிர்கிறது, ஜீனைதாஷெரிப்பின் சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார், சாணைக் கூறை, ஒவ்வாத முனைகள், வை. அகமத்தின் தலைமுறைகள், கிராமத்துப் பெண், ஓ.கே. குணநாதனின் ஊமை நெஞ்சின் சொந்தங்கள், அன்பு மணியின் ஒரு தந்தையின் கதை, திமிலை மகாலிங்கத்தின் அவனுக்குத்தான் தெரியும், மண்டுர் அசோகாவின் பாதை மாறிய பயணங்கள், திமிலைத் துமிலனின் மஞ்சு நீ மழை முகில் அல்ல, ஆ.மு. சி. வேலழகனின் சில்லிக்கொடி ஆற்றங்கரை, காடும் கழனியும், காணா இன்பம் கனிந்ததேனோ, எஸ்.ஜோண்ராஜனின் போடியார் மாப்பிள்ளை, அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்து விட்டது, அக்கரை பச்சையில்லை, வ.அ. அரசரெத்தினத்தின் கொழுகொம்பு, துரைக்காரன், ஒரு வெண் மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது, மண்ணிற் சமைந்த மனிதர்கள், அப்துல் சமதுவின் பனி மலர், நஸ்ரூதினின் நஞ்சு வளையம், அஸிஸ் எம். பாயிஸின் வயலான் குருவி, தீரன் ஆர்.எம். நௌசாத்தின் நட்டுமை, பள்ளிமுனைக் கிராமத்தின் கதை, விமல் குழந்தைவேலின் வெள்ளாவி, மண்ணும் மல்லிகையும், இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தில்லை ஆற்றங்கரை, ஒரு கோடை விடுமுறை போன்ற பல நாவல்கள் காணப்படுகின்றன.

இவைகளின் பிரதேச மண் வாசனையை சிறப்பாக வெளிப்படுத்தக் கூடியவை என்று நோக்கினால் மிகச் சிலவே தேறும். சில ஓரளவானவை.

குடும்பப்பாங்கான நாவல்கள் எனும்போது பவள சுந்தரம்மாவின் மலரத் துடிக்கும் மொட்டுக்கள், நினைவே நீ சுடாதே, ரவிப்பியாவின் இதழில்லாத ரோஜா, சந்தன ரோஜாக்கள், (இவ்வாறான ஐந்து நாவல்கள்) ந. பாலேஸ்வரியின் உள்ளத்தின் உள்ளே அகிலா உனக்காக (இவ்வாறான 12 நாவல்கள்) திருமலை வி.என். சந்திர காந்தியின் மீண்டும் வசந்தம் ஆகியவைகளைக் குறிப்பிடலாம். இவ்வகையான நாவல்களை பெண் அல்லது பெண் பெயரைத் தாங்கிய ஆண் எழுத்தாளர்கள் எழுதியுள்ளமை கவனிக்கத்தக்கது.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் பல புகலிடத்து வாழ்வினையும் உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ் நதிக்கரை போன்றன பெண்ணியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகின்றன. புலம்பெயர் வாழ்வு இவரின் பார்வையை ஆழப்படுத்தி விசாலிக்க வைத்திருக்கின்றன எனலாம்.

இவ்வாறே விமல் குழந்தைவேலின் வெள்ளாவி நாவலும் மிகச் சிறந்த ஒரு நாவலாக கொள்ளப்படத்தக்கது. கிழக்கின் முதல் தலித் நாவலாக கொள்ளப்படத் தக்கதுடன் சலவைத் தொழிலாளியின் வாழ்வை யாரும் தொடாத அளவு உயிர்த் துடிப்புள்ள பேச்சு மொழி கொண்டு யதார்த்தமாக கலாபூர்வமாக பதிவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

கிழக்கின் இன்னுமொரு நவீன நாவலாக குறிப்பிட வேண்டும் எனில் திசேராவின் ஏவி விடப்பட்ட கொலையாளியைக் குறிப்பிடலாம். வித்தியாசமான எழுத்து முறையைக் கொண்ட சிறுகதை படைப்பாளியாக அறியப்பட்ட திசேராவின் முதல் நாவல் சுனாமியைப் பற்றிய பல படைப்புக்கள் வெளிவந்திருப்பினும் சுனாமி பற்றி வெளி வந்த முதல் நாவல் வித்தியாசமான வடிவமைப்பு கதை கூறும் பாணியும் வேறுபட்டது.

ஆ.மு.சி. வேலழகனின் சில்லிக் கொடி ஆற்றங்கரை ஈழத்து நாவல் உலகில் வித்தியாசமான கதையம்சம் கொண்ட நாவல். வேடர்களின் வாழ்க்கை முறையைப் பற்றியும் வேடர் சமூகம் விவசாய சமூகமாக படிப்படியாக மாற்றப் படுவதையும் ஆவணமாக்கப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்

எஸ்.நஸீருதீனின் நச்சு வளையம் நிலாம் என்ற முஸ்லீம் இளைஞனது இளமைக்கால வாழ்க்கையை மையமாகக் கொண்டு முஸ்லீம் தமிழர்-உறவு. இனப்படுகொலைகள் என விரிகிறது.முஸ்லீம் தேசியம் பற்றிய கருத்தியலும் தொனிக்கிறது.வளமான மொழி நடையுடன் கூடிய சிறப்பான நாவல்.

அடுத்து அருள் சுப்ரமணியத்தின் அவரர்களுக்கு வயசு வந்து விட்டது. நாவல் இலக்கியத்துக்கு வேண்டிய பொருட்சிறப்பும் ஆக்கச் செம்மையும் கொண்டது. 'ஈழத் தமிழ் இலக்கியத்தின் பதச் சோறாக விளங்கக்கூடிய தகமை இதற்கு எல்லா வகையிலும் உண்டு' என்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. ஈழத் தமிழ் நாவலுக்கு வயது வந்துவிட்டது என்பதற்கு சான்றாக விளங்குகின்றது. இந் நாவல் கதைப் பொருளை கையாள்வதிலும், கதை சொல்லும் உத்தியிலும், பாத்திரப் படைப்பிலும் சம்பவக் கோவையின் நடப்பியல் நேர்மையிலும் சிறந்து விளங்குகின்றது என்கின்றனர். பெ.கோ. சுந்தரராஜனும், சோ. சிவபாதசுந்தரமும் இரண்டு தலை முறைகளுக்கிடையே நிகழும் வாழ்வு.

நிலமும் நிலத்தடி வேருமாக பொன்னன் வெளிக்கிராமம் விரிகிறது. நில ஆக்கிரமிப்பும், பேரினவாத குடியேற்றம், முஸ்லஜும் தேசம் பற்றிய பதிவு என சமகால அரசியலுடன் தொடரும் இந் நாவல் வளமான பேச்சு வழக்கு எடுத்துரைப்பு முறை என சிறந்ததொரு படைப்பாக மிளிர்கிறது.

மொழிபெயர்ப்பு எனும் வகையில் சிங்களத்திலிருந்து தமிழுக்கு ஒரு நாவலை ஜீனைதா ஷெரிப் பெட்டிசம் எனும் பெயரில் மொழி பெயர்த்துள்ளார். கிழக்கிலிருந்து இதுவரை ஒரேயொரு நாவலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

தொகுத்து நோக்கும் போது

- ❖ ஆரம்பகால நாவல்களான ஊசேன் பாலந்தை கதை, மோகனாங்கி என்பன ஈழத்து நாவல் பரப்பில் தோற்றம் பெற்று ஆண்டு ரீதியில் முக்கியம் பெறுகின்றன.
- ❖ மோகனாங்கி முதல் வரலாற்று நாவல் என்ற பெருமையைப் பெறுகின்றது.
- ❖ ஈழத்து நாவல்களை பட்டியல் படுத்தும் போது அவர்களுக்கு வயது வந்து விட்டது, புதியதோர் உலகம், துன்ப அலைகள், ஏவி விடப்பட்ட கொலையாளி, சில்லிக்கொடி ஆற்றங்கரை, வயலான் குருவி, நச்சு வளையம், வெள்ளாவி, மூன்றாவது சிலுவை, சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார், வ.அ. இராசரெத்தினத்தின் நாவல்கள் உதாரணம் கொழுகொம்பு, இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்கள் ஆகியவற்றுக்கு முக்கிய இடமுண்டு என்பதுடன் கிழக்கிலங்கையின் பங்களிப்பாகவும் இதனைக் கருதலாம்.
- ❖ ஏவிவிடப்பட்ட கொலையாளி வித்தியாசமான நாவலாகவும் புதிய வரவாகவும் உள்ளது.
- ❖ பொதுவாக செ. கணேசலிங்கத்தையோ டானியலையோ இங்கு நாம் காணவில்லை. செங்கையாழியனின் வகை மாதிரிகளையே இங்கு நாம் காண்கின்றோம்.
- ❖ கொரில்லா, ம், போன்ற வடிவ ரீதியில், எடுத்துரைப்பு வகையில் வித்தியாசமான படைப்புகள் ஒன்றைத்தானும் காணக் கிடைக்காமை ஏமாற்றமளிக்கிறது.
- ❖ பெண் எழுத்தாளர்களின் வெளிப்பாடு காத்திரமாக வெளிப்படாமை பாரிய குறைபாடு(இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தவிர)
- ❖ நீண்ட நெடும் நாவல்கள் இல்லை என்றிருந்தோம் அந்த வீட்டினிலே, கனவுச் சிறை, விஸ்ணுபுரம், மாயி போன்றன அளவிலும் கதையின் காலவோட்டத்திலும் பெரியன.
- ❖ சில பதிவுகளை மேற்கொண்டுள்ளோம். சுனாமி, வன்னி இறுதி யுத்தம், தாக்குதல் பற்றிய உண்மை நிகழ்வு, இயக்க உட்கட்சி மோதல், சில கிராமங்களை மையப்படுத்திய வரலாற்றுப் போக்கு, தலைமுறை இடைவெளிப் பதிவு நில ஆக்கிரமிப்பு என பல விடயங்கள்.
- ❖ பொதுவாக கிழக்கிலங்கை நாவல்கள் எனும் போது நெஞ்சை நிமிர்த்த முடியா விட்டாலும் தலை நிமிரக்கூடிய அளவிற்கு ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சியில் எமது பங்கையும் நிறைவேற்றியுள்ளோம் என்பதை நினைவில் கொள்ளலாம்.
- ❖ இவ்வாறு உள்ளடக்க ரீதியில் ஓரளவு ஒப்பிடக்கூடியனவே தவிர படைப்பாக்க முறையில் தேக்க நிலையே உள்ளது என்பதை நாம் மனம் திறந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நழுவிச் செல்லும்...

வேலைகள் எல்லாம் செய்து முடிக்கையில் தொலைபேசி மணி ஒலித்தது. "அம்மா, நாங்க கொழும்புக்கு வந்திற்றம். எப்படியும் ரெண்டு மூண்டு மணிக்குள்ள அங்க வந்திடுவம்" என்ற நளாயினியின் குரல் தேனாய் இனித்தது. அன்றிரவு அவளோடு வந்து தங்கிய மூத்த மகள் வசந்தியையும் பிள்ளைகளையும் எழுப்பினாள். அவர்களையும் ஏவி ஏவி வேலை வாங்கி இறைச்சி, மீன், மரக்கறி என்று ஏழெட்டுக் கறி வகைகளும் சோறும் சமைத்து வைத்து விட்டு அந்த மாலைக்காக காத்திருந்தாள் செல்லம்மா.

பகல் பொழுது தாண்டி இரண்டு மணி மூன்று மணி என்று நேரம் போய்க் கொண்டிருந்தது. நளாயினியும் பிள்ளைகளும் வரவே இல்லை. இரவு ஏழு மணியளவில் தொலைபேசி சினுங்கியது. "அம்மா நாங்க மூண்டு மணிக்கே வந்திட்டம். இஞ்ச மச்சாளும் தருமலிங்க அண்ணனும் தங்கட வீட்டில நிற்கச் சொல்லி தெண்டிச்சதால இஞ்சையே நிற்கிறம். காலையில அங்க வருவம். பிரயாணக் களைப்பு. பிள்ளைகளும் அலுத்துப் போயிற்றானுகள். தூரப் பிரயாணம் தானே அம்மா?" என்று குழைந்தாள் நளாயினி. நீர் வற்றிப் போன கட்டாந்தரையின் பயிர் போல செல்லம்மாவின் மனதுக்குள் துளிர் விட்டிருந்த சந்தோசக் குருத்துக்கள் தலை கவிழ்ந்தன. அவள் ஆசை ஆசையாய் சமைத்த உணவு அப்படியே கிடந்தது. வசந்தியும் பிள்ளைகளும் கூட ஏமாற்றத்தில் சோர்ந்து போனார்கள். ஏழு வருடங்களின் பின் மகளை காணத் தவித்த அந்தத் தாயின் உணர்வுகளில் பெருத்த இடியாய் இறங்கிய அந்தச் செய்தி அவள் வீடெங்கும் சோகமாய் அப்பிக் கிடந்தது.

மறுநாள் காலையில் தருமலிங்கம் குடும்பத்தோடு வந்து இறங்கினாள் நளாயினி. பத்தொன்பது வயதில் சின்னஞ் சிறு பெண்ணாய் வீட்டை விட்டுப் போன தன் மகளை கொழு கொழுவென்று இரண்டு பிள்ளைகளின் தாயாய் காண்கையில் பூரித்துப் போனாள் செல்லம்மா. நேற்றைய ஏமாற்றமும் மனவருத்தமும் காணாமற் போயிற்று. மகளையும் பேரக் குழந்தைகளையும் கட்டியணைத்து மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள் அந்த அப்பாவித் தாய்.

செக்கச் செவேல் என்று நளாயினியை ஒட்டிக் கொண்டு திரிந்த பேரக் குழந்தைகளை ஆசையாய்த் தூக்கி மடியில் இருத்திக் கொண்டு கதை கேட்டபோது அவர்கள் மிரள மிரள விழித்தார்கள். அவள் கேட்டவை எவையும் அவர்களுக்கு புரியவில்லை. நிலைமையைப் புரிந்து கொண்ட நளாயினி "அவனுகளுக்கு தமிழ் தெரியாதம்மா" என்றாள் பெருமையாக. விக்கித்துப் போனாள் செல்லம்மா. "தமிழ்ப் புள்ளைகளுக்கு தமிழ் தெரியாமலா வளர்க்கிறயள்?" செல்லம்மாவின் ஏமாற்றம் வார்த்தைகளில் சிதறியது. வசந்தியின் பிள்ளைகள் இருவரும் அவர்களை ஆசையோடு தொட்டுப் பார்ப்பதுடன் நிறுத்திக் கொண்டனர்.

தான் ஆசை ஆசையாய் செய்து வைத்த பலகாரங்களையெல்லாம் எடுத்து வந்து சாப்பிடக் கொடுத்தாள் செல்லம்மா. "ஏனம்மா இப்படி கஷ்டப்பட்டு செய்தனீங்கள், அங்க இஞ்ச கிடைக்கிற எல்லாச் சாமானும் வாங்கலாம்." 'என்று நளாயினி சொன்ன போது இப்படி அன்பாய் ஆசையாய் செய்த அம்மாட கைத்தயாரிப்புகளும் கிடைக்குமா அங்க?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

தான் கொண்டு வந்திருந்த பொருட்களை அம்மாவுக்கு, அக்கா அத்தானுக்கு பிள்ளைகளுக்கென்று பிரித்துக் கொடுத்தாள் நளாயினி. சமையல் சாப்பாடெல்லாம் முடிந்து எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஏழு வருடப் பாசத்தையெல்லாம் அந்த ஒரு நாளின் சில மணித் துளிகளிற் பகிர்ந்து கொள்ளத் தவிர்த்தாள் செல்லம்மா.

மாலையானதும் தாங்கள் வந்த வேனைத் திருப்பி எடுத்து புறப்படுவதற்கு ஆயத்தமாக நிறுத்தினார் தருமலிங்கம். "நேரம் போகுது ... போவமா?" என்று கேட்டாள் நளாயினியின் மச்சாள். "போறதா எங்க?" என்று அதிர்ந்தாள் செல்லம்மா.

"நாங்க மச்சாள்ற வீட்டிலதான் நிக்கப் போறம் அம்மா. இஞ்ச பெரிசா வசதியில்லதானே? ஏசி ரூமில படுக்காட்டி இவனுகள் நித்திரை கொள்ளமாட்டானுகள். இந்தச் சின்ன ரூமுக்குள்ள இடமும் காணாதுதானே. இவரும் வரக்குள்ள சொல்லி அனுப்பினவர்... ரெண்டு கிழமை திரும்பத்தானே அடிக்கடி வந்திற்றுப் போறம் அம்மா...."

செல்லம்மாவின் நெஞ்சில் ஏறி மிதித்திருந்தால் கூட அவள் அப்படி வேதனைப் பட்டிருக்க மாட்டாள். பத்தொன்பது வயது வரை தாய்ப் பாசத்தில் வளர்ந்த வீடு வசதியில்லாத வீடாய்ப் போனது எப்படி என்று புரியாமல் நின்றாள் அவள்.

நளாயினியையும் பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு வாகனம் பறந்தது. செல்லம்மா தன் காலடியில் வந்து நின்று "ஏனம்மம்மா போறாங்க?" என்று கேட்ட வசந்தியின் பிள்ளைகளை இரண்டு கைகளாலும் இறுக அணைத்துக் கொண்டாள்.


யாழ்ப்பாணம் வரவேற்கிறது வளைவு உடைக்கப்படும்?



ஏ-9 வீதி விஸ்தரிப்புக்காக யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் உள்ள 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவு உடைக்கப்பட வுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது ஏ-9 வீதியை விஸ்தரிக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு விஸ்தரிக்கும் போது, யாழ்ப்பாணத்தின் நுழை வாயிலான செம்மணிப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவேற்கிறது என்ற வாசகங்களுடன் உள்ள வீதி வளைவினை உடைக்க வேண்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். இந்த வளைவை உடைப்பதால் உண்டாகும் இழப்பினை ஈடு செய்வதற்காக பிரதேச சபைக்கு பத்து இலட்சம் ரூபாவை வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்க முன்வந்துள்ளது. எனவே வீதி விஸ்தரிப்பு பணிகள் முடிவடைந்ததும் அந்த இடத்தில் தமிழர்களது கலாசாரத்தை சித்திரிக்கும் வகையில் புதிய வரவேற்பு வளைவு அமைக்கப் படவுள்ளது. குறிப்பாக நல்லூர் இராசதானியின் அடையாளங்களை மையப்படுத்தியதாக இந்த புதிய வரவேற்பு வளைவு அமைக்கப்பட வுள்ளது. அநேகமாக இந்த வருட இறுதிக்குள் புதிய வரவேற்பு வளைவு அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்து விடும் என்று தெரியவருகிறது.

யாழில் புதிய சிறைச்சாலை.



யாழ்ப்பாணத்தில் புதிய நவீன சிறச்சாலை ஒன்றுக்கான கட்டிட நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

யாழ் புதிய சிறைச்சாலைக்கான கட்டட நிர்மாணப் பணிகள் எதிர் வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளதாக யாழ் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

2000 ற்கு மேற்பட்ட கைதிகளைத் தடுத்து வைக்கக் கூடிய வகையில் நவீன வசதிகளைக் கொண்டதாக இந்த புதிய சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது. கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் ஏற்கெனவே நடைபெற்றுள்ளதுடன் நிர்மாணப் பணிகள் யாவும் 2013 ஆம் ஆண்டில் பூர்த்தியடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



யாழ்.குடாநாட்டுக்கு நேற்று விஜயம் செய்த கனேடிய பாராளுமன்ற தூதுக்குழுவினர் யாழ. மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரந யாழ் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரையும் சந்தித்துப் பேசியபோது எடுத்த படங்கள்.

அலுகோசி பதவிக்கு ஆட்சேர்ப்பு.

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் தூக்கிலிடுபவர் பதவியில் இரண்டு வெற்றிடங்கள் நிலவுகின்றன. விரைவில் இப் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு சிறச்சாலைகள் திணைக்களம் தீர்மாணித்துள்ளது.

இந்தப் பதவிக்குரிய சிங்களச் சொல்லான அலுகோசுவ என்பதற்கு பொருத்தமான புதிய சிங்களச் சொல் ஒன்றையும் சிறச்சாலைகள் திணைக்களம் அறிமுகம் செய்யவுள்ளது. இப் புதிய பெயரும் பொது மக்களிடமிருந்து கோரப்படவுள்ளது. கண்டி போகம்பர, கொழும்பு சிறைச்சாலைகளில் தூக்கு மரங்கள் உள்ளன. இங்கு 339 தூக்குத் தண்டனை கைதிகள் உள்ளனர். இருப்பினும் இலங்கையில் 1976 ஆம் ஆண்டிலிருந்து மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

மன்முனை பாலத்துக்கு ஒப்பந்தம் கைச்சாத்து.

மன்முனைப் பாலம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. யப்பான் அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்கான யப்பானிய தூதுவர் கூனியோரகா □ாசியும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.வி. ஜெயசுந்தரவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

சர்வதேச ஒத்துழைப்புக்கான யப்பான் முகவர் நிறுவனத்தின் நன்கொடையின் மூலம் 173 கோடி 60 இலட்சம் ரூபா செலவில் மண்முனைப் பாலம் அமைக்கப் படவுள்ளது. இந்த நன்கொடை ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்திலும் இலங்கை அரசின் பிரதிநிதியாக மேற்படி பி.வி. ஜெயசுந்தரவும் சர்வதேச ஒத்துழைப்புக்கான யப்பான் முகவர் நிறுவனத்தின் இலங்கை அலுவலக சிரேஷ்ட பிரதிநிதி அகிரா ஷிமுறாவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

தாம்போதியுடன் கூடியதாக 210 மீற்றர் நீளமும் 9.8 மீற்றர் அகலமும் கொண்டதாக மண்முனைப் பாலம் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளும் நலம் பெற வாழ்வில் வளம் பெற

காலையில் எழுந்ததும் அவரை இலைச்சாற்றை முகத்தில் தடவி வைத்திருந்து ஒரு மணி நேரம் கழித்துக் குழித்து வருவதை பழக்கமாக்கி வைத்திருந்தால் முகம் நாள் முளுவதும் பளபளப்பாயிருக்கும்

சந்தனத்தை நீரில் கரைத்து அத்துடன் பாசிப்பயறு சேர்த்து ஊறவைத்து அம்மியில் வைத்து அரைத்தெடுத்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து குளித்து வந்தால் முகத்தில் ஏற்படும் கரும் புள்ளிகள் நாளடைவில் மறைந்து விடும்.

இஞ்சித் துண்டுகள் இரண்டை எடுத்து இடித்து சாறெடுத்து நன்கு தெளிய வைத்து, அந்த தெளிவை வடித்தெடுத்து விட்டு கீழ்ப்பகுதியில் தங்கும் மண்டியை மட்டும் எடுத்து அத்துடன் சிறிதளவு தேனையும் கலந்து குழைத்தெடுத்து முகத்தில் உள்ள பருக்களின் மீது தடவி வந்தால் சில நாட்களில் பரு மறைந்து விடும்.

சாதிக்காயை அரைத்தெடுத்து அத்துடன் சிறிது சந்தனத்தை கரைத்து கலக்கி, இரவில் படுக்கமுன் முகத்தில் தடவி வைத்திருந்து, பின் காலையில் முகத்தை கழுவி வந்தால் முகப்பருக்கள் மறைவதுடன் முகம் பளபளப்பாக தோன்றும்.

தயிரின் மீது படரும் பாலாடையை எடுத்து அத்துடன் சிறிது மஞ்சள் பொடியையும் போட்டு நன்கு கலக்கி, இரவில் படுக்கப் போகுமுன் முகத்தில் தடவி விட்டு, காலையில் சிகைக்காய்த் தூள் போட்டுக் கழுவி சுத்தம் செய்து வந்தால் முகத்தில் கரும் புள்ளிகள் மறைந்து முகம் பளபளப்பாக காட்சியளிக்கும்.

கடற் சங்கை கொண்டு வந்து பசுவின் பால் விட்டு உறைத்து எடுத்து பருக்களின் மேல் தடவினால் ஓரிருநாட்களில் முகப்பரு மறைந்த முகம் பொலிவடையும்.

பிஞ்சுக் கடுக்காயை சேகரம் செய்து இடித்து ஒரு மண் பானையில் இட்டு சிறிது நீர் விட்டுக் கலக்கி பானையின் வாயை மெல்லிய துணியால் மூடிக் கட்டி இரவு முளுவதும் நிலவொளியில் வைத்திருந்து காலையில் எடுத்து அந்த நீரை வடிகட்டி முகத்தில் நன்கு தேய்த்து கழுவி வர வேண்டும். தொடர்ந்து இவ்வாறு சில நாட்களுக்கு செய்து வந்தால் முகத்தில் சுருக்கங்கள் மறைந்து பொலிவு தரும்.

துளசி இலைகளை கசக்கி அந்த நீரை முகத்தில் தேய்த்துக் கொண்டு இரவில் படுத்திருந்து விட்டு காலையில் எழுந்ததும் கழுவி சுத்தம் செய்து வந்தால் முகம் அழகாக காட்சி தரும்.

சிறிது சீரகத்தை எடுத்து அத்துடன் சிறிது எருமைப்பால் இட்டு அம்மியில் வைத்து விழுதாக அரைத்தெடுத்து அந்த விழுதை முகப் பருக்களின் மீது தடவிச் சிறிது நேரம் வைத்திருந்து பிறகு கழுவி சுத்தம் செய்து வந்தால் முகப் பருக்கள் மறையும்.

வெள்ளைப் பூண்டு பற்கள் ஐந்தை எடுத்துக் கொண்டு அவற்றின் தோலை நீக்கிவிட்டு அத்துடன் 10 மிளகு, ஒரு கைப்பிடியளவு துத்தி இலை ஆகியவற்றையும் சேர்த்து அம்மியில் வைத்து விழுதாக அரைத்தெடுக்கவும். இந்த விழுதை வாணையில் போட்டு 50 மி.லி. சிற்றாமணக்கு எண்ணெய்யை ஊற்றிக் கலக்கி அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். மருந்துப் பொருட்கள் சிவந்ததும் இறக்கி வடிகட்டி பாட்டில் எடுத்து வைத்துக் கொள்ளவும். முகத்தில் பரு உள்ள இடங்களில் காலை, பகல், இரவு மூன்று முறை தொடர்ந்து அழுத்தித் தடவி வந்தால் படிப்படியாய் முகப்பரு மறையும்.

தினமும் அதிகாலையில் செடிகளின் மீது படர்ந்திருக்கும் பனித்துளிகளைப் பஞ்சினால் ஒத்தியெடுத்து முகத்தில் தடவி வந்தால் முகம் பளபளப்பாக விளங்கும்.

வெள்ளைப் பூண்டை பாலில் போட்டு வேக வைத்து பிறகு அதை விழுதாக அரைத்து பருக்களின் மீது தடவி வந்தால் பருக்கள் மறையும்.

திருநீற்றுப் பச்சையிலைகள் சிலவற்றை அம்மியில் வைத்து அத்துடன் சிறிது வசம்பையும் சேர்த்து இளநீர் விட்டு மைபோல அரைத்தெடுத்து பருக்களின் மீது தடவி வந்தால் பருக்கள் மறையும்.

முகத்தில் கரும் புள்ளிகளும், சுருக்கங்களும் காணப்பட்டால் அவர்கள் பப்பாளிப்பழத்தை அரிந்து கண்களுக்கருகிலுள்ள பகுதியில் மட்டும் படாமல் தடவி சிறிது நேரம் வைத்திருந்து பிறகு குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவினால் சுருக்கங்கள் மறையும்.
சித்த வைத்தியம்.

வடக்கு அபிவிருத்தி செய்யப்படாமையே புலிகள் ஆயுதம் ஏந்தக் காரணம்

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் வடக்கில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவில்லை இதன் காரணமாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர், தவிர கூறு போடுவதற்காக அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை எனவே புலிகளில் தவறில்லை. இந்தக் கருத்தை சிறிலங்கா உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஷாநாயக்கா வெளியிட்டார். கிழக்குப பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது

இன்று எமது நாட்டில் யுத்தம் ஓய்ந்து அமைதியான சூழ்நிலை காணப்படுகின்றது. நாட்டில் அன்றைய யுத்த நிலைக்கு சிலர் காரணமில்லை. அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உட்பட இந்த தவறை விட்டவர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர். இந்த யுத்த காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்கள் மற்றும் இழப்புகளுக்கு எல்லாம் இவர்கள்தான் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் முன்மாதிரியை நினைவு படுத்த விரும்புகின்றேன். அதாவது பழைய சம்பவங்களை மறந்துவிட வேண்டுவோம். நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தென்னாபிரிக்காவை கட்டியெழுப்புவோம் என தென்னாபிரிக்கா விடுதலை பெற்றபோது வெள்ளை இனத்தவருக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

நெல்சன் மண்டேலா ஜனாதிபதி பதவிக்கு வரும் வரை தென்னாபிரிக்காவில் கறுப்பு இன மக்கள் வாக்குரிமை அற்றவர்களாகவே வாழ்ந்தார்கள். 20 சதவீதமாக அங்கு வாழ்ந்த வெள்ளை இனத்தவர்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தார்கள்.

கறுப்பு இனத்தவர்கள் வாக்குரிமை பெற்று நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட வேளை வெள்ளையர்கள் நாட்டைவிட்டு வெளியேற தயாரான போது, நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தென்னாபிரிக்காவை கட்டியெழுப்பவோம் என அழைப்பு விடுத்து அவர்களின் முடிவை மாற்றியமைத்தார்.

எமது நாட்டை பொறுத்தவரை இப்போது சிறுபான்மை, பெரும்பான்மை என யாரும் இல்லை. நாம் எல்லோரும் ஒன்றுதான் என்பதை உனர்ந்து செயற்பட வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எங்களிடையே பிரிவு வேண்டாம்.

அன்று வடக்கு மக்கள் தமது உரிமைக்காக போராடினார்கள். அதாவது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தவறில்லை. 1948 சுதந்திரத்திற்குப் பின்னர் வடக்கில் அபிவிருத்தி நடைபெறவில்லை. அதன் காரணமாகவே வடக்கு இளைஞர்கள் யுத்தத்திற்கு தள்ளப்பட்டார்கள். வடக்கு மக்கள் நாட்டைப் பிரிப்பதற்காக யுத்தத்தில் ஈடுபடவில்லை.

மேற்குலக நாடுகள் இலங்கையை பிரிக்க வேண்டும் என முயற்சிக்கின்றன. அப்படி பிரிக்க வேண்டும் என்பதில் சந்தோசம் காண்கிறார்கள். அவர்களுடைய முக்கிய நோக்கம் என்னவென்றால் இந்தியாவை பிரிக்க வேண்டும் என்பதற்காகவே இலங்கையைப் பிரிக்க முற்படுகிறார்கள். எமது நாட்டை ஒருபோதும் பிரிக்க முடியாது அதற்கு இந்தியாவும் துணைபோகாது.

கடந்த 30 வருட யுத்த சூழ்நிலை -காரணமாக தமிழ் கல்விமான்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறினார்கள். வடக்கில் கல்விமான்கள் மற்றும் அறிஞர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்பட்டது. இந்த நிலை மாறி மீண்டும் பழைய நிலை உருவாக வேண்டும். இதற்கு ஏற்ப பல்கலைக்கழக கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும்.

சிங்கள மாணவர்களைப் பொறுத்தவரை 80 சதவீதமானவர்கள் சிங்கள மொழியிலும் தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை 80 வீதமானவர்கள் தமிழ் மொழியிலும் கல்வி பயில்கிறார்கள். இந்நிலையில் தாய் மொழியில் கல்வி பயின்று மேற்குலக நாடுகளில் உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு பெறுவதென்பது சாத்தியப் படுவதிற்கில்லை. ஆங்கில மொழியிலும் கல்வி கற்பதற்கு மாணவர்கள் தயாராக வேண்டும். இந்த ஆங்கில மொழி என்பது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெறுமதி வாய்ந்த மொழியாகும். இந்த நாட்டில் இனரீதியாக, மதரீதியாக எந்தப் பல்கலைக்கழகமும் இயங்க முடியாது என்றார்.

வன்னியில் புதுவகை காய்ச்சல்

கிளிநொச்சி மாவட்டம் உட்பட வன்னிப்பகுதிகளில் [illegible] மக்களிடையே வேகமாகப் பரவியுள்ள ஒருவகை காய்ச்சலினால் [illegible] மரணமானதைத் தொடர்ந்து இக்காய்ச்சல் [illegible] ஆய்வினை மேற்கொள்ளும் முகமாகவும் சிகிச்சையளிக்கும் [illegible] யாழ்ப்பாணத்திலிருந்து [illegible] நிபுணர் குழுவினர் கிளிநொச்சிக்குச் [illegible].

இறுதியாக [illegible] கிளிநொச்சியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை [illegible] உடற்கூறுகள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளும் முகமாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந் திடீர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் மூன்று தினங்களுக்குள் காய்ச்சல் [illegible] மரணத்தை தழுவுகின்றனர்.

இந்த நோயை குணப்படுத்த முடியாத நிலையில் வைத்தியர்கள் [illegible]. இதேவேளை [illegible] மக்கள் [illegible] கிளிநொச்சியில் [illegible] காணப்படுவதாகவும் [illegible] உள்ளதாகவும் [illegible] தாப்பில் [illegible].

சினிமா பகுதி...



ஏபரலில் இருந்து தமன்னாவின் தமிழ் திரைப்படம்

அள்ளிக் கட்டி பரணில் போட்ட தமன்னா பேனர்களையெல்லாம் மீண்டும் ஒரு முறை தூசு தட்டி எடுத்து வைத்துக் கொள்வது அவரது ரசிகர் மன்றத்தினருக்கு நல்லது ஏனென்றால் மீண்டும் தமிழ்ப் படங்களின் மீது ஆசை வந்திருக்கிறதாம் தமன்னாவுக்கு.
கோடம்பாக்க மேனேஜர்கள் சிலருக்கு சமிபத்தில் வந்த போன், இன்ப தேனன்றி வேறில்லை. யார் யாருக்கு பார்க்கிறீங்க? இடையில் நமக்கும் பார்க்கிறதுன்னா என்ன ஃபார்மாலிடிஸ் என்றெல்லாம் ஆசையைத் தூண்டினாராம் தமன்னா. ஒண்ணுமே வேணாம் என்று தூண்டில் போட்டவர்களுக்கும், பத்து பர்சென்ட் என்று பம்மாத்து காட்டியவர்களுக்கும் ஏப்ரல் வரைக்கும் பொறுங்க என்பதுதான் தமன்னாவின் தற்போதைய பதில்.
ஆந்திரா பக்கம் விசாரித்தால் அவளவும் உண்மைதான் என்ற தகவல் அங்குள்ள படங்களுக்கு கொடுக்கப்பட்ட கால்ஷீட்டுகள் அத்தனையும் ஏப்ரலோடு முடிகிறதாம். அதன்பின் தமிழ் படங்களைத்தான் மனதில் நினைத்திருக்கிறாராம் அவர்.

வெள்ளத்தில் விளைந்த காதல் உள்ளத்தை உருவாக்கும் ராஜா...



என்னைத் தெரியுமா என்ற படத்தின் இசை வெளியீட்டு விழா நடந்த நாள் அது (கிட்டத்தட்ட இரண்டு வருசமாவது இருக்கும்) படத்தின் தயாரிப்பாளரான தெலுங்கு நடிகர் மோகன்பாபு, தனது மகனை இப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகப்படுத்தும் ஆர்வத்தில் வந்திருந்தார் சாயங்காலம் ஆறுமணிக்கு இசைஞானி இளையராஜாவுக்குப் போன் செய்து, சாமி எங்க இருக்கீங்க? என்று இவர் கேட்க, அவரோ திருப்பதிக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறேன் என்றாராம். அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம் அடையார் கேட் வரைக்கும் வந்துட்டு போங்க என் பையனை அறிமுகப்படுத்துறேன் உங்க ஆசிர்வாதம் வேணும் அவ்வளவு அவசரத்திலும் ஓடோடி வந்தார் இளையராஜா.




ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த இன்னொரு சம்பவம் தமிழக கவர்னர் ரோசய்யா ஒரு திரைப்பட விழாவிற்கு வந்திருந்தார். விழா நடந்த இடம் பிரசாத் ஸ்டுடியோ. இன்னொரு சிறப்பு அழைப்பாளர் இதே ஸ்டுடியோவில் தனது இசை பணிகளை தொடர்ந்து கவனித்து வரும் இளையராஜா கவர்னருக்காக அத்தனை கூட்டமும் காத்திருந்தது. கவர்னரும் சொன்ன நேரத்தில் வந்தார். அப்புறம் அவரும் காத்திருந்தார். யாருக்காக? இசைஞானி இளையராஜாவுக்காக. கவர்னர் வந்து பத்து நிமிடங்கள் கழித்துதான் ராஜாவே ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்தார். இசைக்கு முன் 'புரோட்டோகால்' ஒரு விஷயமேயில்லை அல்லவா?
மோகன்பாபுவுடன் அவ்வளவு நெருக்கமாக இருக்கும் இசைஞானி தற்போது அவர் மகள் லட்சுமி மஞ்சு தயாரிக்கும் 'குண்டலூரு கோடாலி' என்ற படத்திற்கு இசையமைத்து தரப்போகிறாராம். 1968 இல் ஆந்திராவை மூழ்கடித்த வெள்ளத்தை பின்னணியாக கொண்டு இந்த கதை உருவாக்கப்பட்டிருக்கிறதாம். இந்த வெள்ளத்தில் சிக்கிக்கொள்ளும் இருவர் காதலர்கள் ஆவதுதான் கதை.
இப்படியொரு கதைக்கு ராஜா இருந்தால்தான் இசை வெள்ளத்திலும் ரசிகர்கள் மூழ்க முடியும் என்றாராம் மஞ்சு. மகளே விரும்பிய பின், மோகன்பாபு சும்மாயிருப்பாரா? அதுக்கென்ன செஞ்சுட்டா போச்சு என்று ராஜா சொல்லி, அதற்கடுத்த வாரமே சென்னையில் கம்போசிங்வரைக்கும் முன்னேறிவிட்டார்கள்.

அட்டக்கத்தி ரூட்டு தல..... தமிழன்னையே இந்தா பினாயிலு!

தமிழன்னைக்கு பினாயில் அபிஷேகம் செய்தாலும் சென்னையின் ஜேய.வையும்,.....தாவையும் அவ்வளவு சீக்கிரத்தில் கழுவி சுத்தப்படுத்திவிட முடியாது. "இதெல்லாம் யாரு கையில சொல்லிக்கினு இருக்கே அடிங்கொ...." என்று அவசரமாக மறுக்கும் சென்னைப் புலவர்கள் ""இன்னொன்னும் இருக்கு தெரியுமா?" என்று சொல்வதற்குள் "அட்டக்கத்தி" ரிலீஸ் ஆகிவிட வேண்டும். நாம் தெரிந்து கொள்ள அப்படத்திலும் சில வார்த்தைகளை சேர்த்திருக்கிரார் டைரக்டர் பா. ரஞ்சித். அதில் ஒன்றுதான் "ரூட்டு தல!"



ஒரு க்ளிப்பிங்ஸ் சொல்லிவிடும் அந்தப்படம் ிட்டா பிளாப்பா என்று நாம் பார்த்த பாடல்களும் கிளிப்பிங்ஸ்களும் ட்ரெய்லரும் சொன்ன சங்கதி இதுதான். "எழுதி வச்சுக்க, இந்த வருஷத்தின் படா படா ிட்டு படம்ப்பா இது" என்றது.அத்தனையும்.
வட சென்னையிலிருந்து புறப்பட்டு கல்லூரிக்கு வந்து சேர்கிற வரைக்கும் ஊர் சாபத்தையெல்லாம் வாரிக் கொண்டு வரும் அராத்துகளின் காதல் கதைதான் இது. தினேஷ் என்ற புது முகத்தை அறிமுகப்படுத்தியிருக்கிரார் பா.ரஞ்சித். பொருத்தமான செலஷனாகத்தான் இருக்கிறார் தம்பி. இவருக்கு ஜோடியாக நந்திதா, ஐஸ்வரியா, ஷாலி என்று மூன்று பெண்கள் நடித்திருக்கிரார்கள். அவ்வளவும் பக்கத்து வீட்டுப் பீஸ்.....



"காதலிக்காமல் இருப்பதைவிட காதலித்து தோல்வியடையலாம் தப்பில்லை" என்பதுதான் படத்தின் கான்சப்ட். படம் வெளிவரும் போது தியேட்டரெல்லாம் காலேஜ் ஆக மாறப்போவதை மட்டும் சர்வ சுத்தமாக புரிந்து கொள்ள முடிகிறது நம்மால்.
ஒரு முக்கிய தகவல், பா.ரஞ்சித் வெங்கட்பிரபுவின் உருவாக்கம். மிர்ச்சி, சிவா, யுவன் சங்கர் ராஜா, வைபவ் என்று தனது டீமுடன் வந்து ஆசிர்வதித்தார் வெங்கட்.
சேட்டைகளை ஆரம்பிச்சுட்டாங்கடோய்......

ஆனந்தத்திற்கான விருப்பம்


இவ்வுலகில் நாம் எல்லோரும் ஆனந்தத்தை விரும்புகிறோம். வாழ்க்கையில் நமக்கு ஆனந்தம் எப்படிக் கிடைக்கமுடியும் என்று உலகம் சொல்லிக்கொடுக்கிறது. நமக்கு இது பிடிக்கும், அதில் விருப்பம் என்றும் உலகம் சொல்லிக்கொடுக்கிறது. ஆனால், நாம் நமது விருப்பம் என்ன என்று நம்மிடமே கேட்டுக்கொள்வதே இல்லை. மெள்ள-மெள்ள நேரம் கழிந்துகொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். கண்களும் சரியாகத் தெரிவதில்லை. காதும் சரியாகக் கேட்பதில்லை. நம் வேலைகளையெல்லாம் செய்ய எந்த உடலை எதிர்பார்த்தோமோ, அதுவும் ஒத்துழைக்க மறுக்கத் தொடங்குகிறது. அந்த நேரமும் வருகிறது – கடைசி மூச்சும் கைவிடத்தொடங்குகிறது. அந்த நேரத்தில் கூட நாம் நமக்கு என்ன தேவை, என்ற கேள்வியை கேட்டுக்கொள்வதில்லை. என் இதயத்தின் வேண்டுகோள் என்ன, விருப்பம் என்ன? நான் வாழ்வின் பயனை எப்படிப் பெறுவேன்?

மனிதப் பிறவி, அந்தப் படைப்பாளரின் விலை மதிக்கமுடியாத கொடுப்பினை. இவ்வுலகில் படைப்பாளர் மனிதனுக்கு அன்பளிப்பாக நிறையக் கொடுத்திருக்கிறார். பார்க்கக் கண்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால் கண்களால் நாம் எதைப் பார்க்கிறோம், என்பது நம்மைப் பொறுத்தது. கண்களால் அழகானவைகளையும், மோசமானவைகளையும் நாம் பார்க்கமுடியும். கேட்பதற்காக காதுகளைக் கொடுத்திருக்கிறார்.

ஆனால் அவைகளால் எதைக்கேட்கிறோம் என்பது நம்மைப் பொறுத்தது. கால்களால் நடக்கமுடியும். ஆனால் நடந்து எங்கே செல்கிறோம் என்பது நம்மைப்பொறுத்தது. இந்த உடலில் மூச்சு வந்து செல்கின்ற ஒவ்வொரு நாளும் திரும்ப வாய்ப்பு கிடைக்கிறது. ஒவ்வொரு நாளாக இறைவன் நமக்கு வாய்ப்பு அளித்துக்கொண்டிருக்கிறார். அந்த வாய்ப்பை எடுத்துக்கொள்வது நம் பொறுப்பு.

ஒரு பிரசித்தமான கதை உண்டு. ஒரு ஏழைச் சலவைத் தொழிலாழி இருந்தான். ஒரு நாள் தங்கமழை பொழிந்தது. அன்று அவன் வீட்டில் இருந்தான். வீட்டில் எங்கே பார்த்தாலும் தங்க மழை பொழிவதைப் பார்த்தான். வீட்டில் தங்கமழை என்றால் படித்துறையிலும் பெய்யும் என்று யோசித்தான். என் வீட்டில் அந்நியன் ஒருவனும் வரமாட்டான். ஆனால் படித்துறையில் பலரும் வருவார்கள். அதனால் நான் முதலில் அங்கே சென்று தங்கம் எடுக்கிறேன்; அதன் பிறகு வீட்டில் இருப்பதை சாவகாசமாகத் திரட்டிக்கொள்வேன். இந்த எண்ணத்துடன் படித்துறைக்குச் சென்றான். இவன் அங்கு செல்வதற்குள் அங்கிருந்தவர்கள் எல்லாத் தங்கத்தையும் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அவன் பறவாயில்லை; என் வீட்டிலும் தங்கமழைபெய்திருக்கிறது, என்று நினைத்து வீட்டிற்கு வர, அங்கேயும் எல்லோரும் தங்கத்தை எடுத்துவிட்டார்கள். அதனால் இந்தப் பழமொழி, “இருப்பதை விட்டு பறப்பதைப் பிடிப்பது.” சலவைத் தொழிலாளி, வாய்ப்புக் கிடைத்தும் பலன் அடையவில்லை. நமக்கும் இவ்விதம் நடந்துவிடக் கூடாது. நமது ஒவ்வொரு மூச்சிலும் ஆனந்தம் என்ற விலை மதிக்க முடியாத பொக்கிஷம் நிறைந்துள்ளது. இது படைப்பாளர் மனிதனுக்கு அழித்த அன்பழிப்பு. ஆனால் நாம் அறியாமையால் அதை ஏற்றுக்கொள்வதில்லை. உலகின் மற்ற விஷயங்களிலிருந்து அதைப்பெற முயற்சிக்கிறோம்.

ஒரு முறை ஒரு மனிதனின் யாதகத்தைப் பார்த்து, அதை வைத்துக் கூறினார், சென்ற பிறவியில் அவர் யானையாக இருந்தார், வரும் பிறவியில் அவர் ஒரு பணக்கார வீட்டில் பெண்ணாகப் பிறப்பார். அது மிகவும் ஆச்சரியமான விஷயமாக இருந்தது. உலகமும், நீங்கள் சென்ற பிறவியில் என்னவாக இருந்தீர், வரும் பிறவியில் என்னவாக இருப்பீர்கள் என்று கூறுகிறது,



சென்ற பிறவியில் நீங்கள் யானையாக இருந்தீர்கள் என்றால், யோசியுங்கள், என்ன அர்த்தம்? உங்கள் மனைவி உங்களுக்கு உணவு வைத்தால், மூக்கால் உண்ண முயற்சிப்பீர்களா? ஒரு அர்த்தமும் இல்லை. உண்மையில் அவர் கூறவேண்டியது, இந்தப் பிறவியில் ஆனந்தம் அனுபவிப்பது எப்படி, இந்தப் பிறவியில் நீங்கள் யார், எப்படி இந்த வாழ்வு பயனடையும்?

எல்லோருடைய இதயத்துள்ளும் இன்பம், சாந்தியை நோக்கி அழைத்துச் செல்லக்கூடிய ஒரு பொருள் உண்மையில் வீற்றிருக்கிறதா? இது உண்மை என்றால் இவ்வுலகில் நாம் என்ன செய்தாலும், நம் இதயம் திருப்தி அடையாதவரை எந்த லாபமும் இல்லை. ஒரு எழிமையான உதாரணம். காலணியில் கல் இருக்கிறது என்றால், கால் வலி நீங்க நமக்கு எத்தனை மருந்துகள் சாப்பிட வேண்டும்? ஏத்தனை டாக்டரிடம் செல்ல வேண்டும்? கல் இருப்பதால்தானே காலில் வலி. அதனால் எவ்வளவு டாக்டர்களிடம் சென்று, எவ்வளவு மருந்துகள் சாப்பிட்டாலும், காலணியில் இருந்து கல்லை நீக்காதவரை வலி போகாது. நமது செயல்களும் இப்படித்தான் நடக்கிறது. நாமும் நமது வாழ்வில் - பெரிய கற்களைப் போட்டு வைத்திருக்கிறோம், இதயத்தின் விஷயத்தை யாரும் கேட்பதில்லை.

மனிதனுக்கு இதயத்தின் அவசியம் இருப்பதால், கடவுள் அதை அழித்திருக்கிறார். மனிதனால் எல்லவற்றையுமே புத்தியால் பிடிக்க முடிந்திருந்தால் இதயத்திற்கு அவசியமே இருந்திருக்காது. அதனால் தான் இதயம் கொடுத்திருக்கிறார். புத்தியால் பிடிக்க முடியாத, ஆனால் இதயத்தால் பிடிக்கக்கூடிய அந்தப்பொருள் எது? ஒரு பொருள் மட்டும்தான். அதுதான் பரமானந்தம். கார் ஓட்டுவது எப்படி என்பதை இதயம் கற்றுத்தரமுடியாது, அதற்கு புத்தி அவசியம். ஆனால் பேரின்பத்தை புத்தியால் புரிந்து கொள்ளமுடியாது. இதயம் புரிந்துகொள்ளும். கிடைத்துள்ள இதயத்தையும் உபயோகியுங்கள். ஒருவனின் ஒரு கை சிறு வயது முதலே பின்னால் கட்டப்பட்டு ஒரே கையால் எல்லாமே செய்யவேண்டி இருந்தது. பிறகு ஒருவர் அந்த கட்டுக்களை அவிழ்த்தார். அவனுக்கு இரண்டு கைகளும் கிடைத்ததும் அவனுக்கு வாழ்நாள் முழுவதும் என்ன குறை இருந்ததோ அது நீங்கிவிட்டது. அதேபோல் நாம் நமது இதயத்தைப் புரிந்துகொள்வதில்லை என்றால், நமது ஒரு கை குழந்தைப் பருவம் முதல் பின்னால் கட்டப்பட்டுள்ளது, நாம் இன்று வரை வேலைகளையெல்லாம் ஒரு கையால் மட்டுமே செய்து வந்துள்ளோம். நமக்கு நினைவு தெரிந்த நாள்முதலாக இதயத்தினுள் ஒரு தாகம் அந்தப் பரமானந்தத்தைப் பெறுவதற்காக எப்பொழுதும் உள்ளே நம்மைத் தூண்டிக்கொண்டிருக்கிறது. நம்முள்ளே மகிமை வாய்ந்த உண்மை இருக்கிறது. அதுதான் பரமானந்தம் அந்தப் பேரின்பம், சாந்தி, ஆனந்தத்தை நாமே அனுபவிக்கலாம் அந்த அனுபவத்தின் ஆனந்தத்தைப் பெறலாம். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்றால் சுலபமாக ஆனந்தம் அடையலாம். இதற்காக என்ன செய்ய வேண்டும்? தேடுவதால் இது கிடைக்காது. ஏனென்றால் இந்தப் பேரின்பம் ஏற்கனவே உங்களுள் இருக்கிறது. அதாவது உங்கள் அருகில்.

உண்மையான சுகம் எங்கே உள்ளது?

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் இன்பமே விரும்புகிறான். எல்லோருக்கும் குழந்தைப் பருவம் முதலே ஆனந்தம் பெற ஆசை இருக்கிறது. வாழ்வில் ஆனந்தமும், இன்பமும், சாந்தியும் வேண்டும். ஆனந்தம் கிடைத்துக் கொண்டிருந்தால் எல்லாம் சரிதான். மனிதனுக்கு இன்பம் பெறுவதற்கு ஒரு எல்லையே கிடையாது. ஆனால் சிறிதளவு துன்பம்கூட தாளமுடியாது. இதுதான் மனிதனின் இயற்கை. இதுதான் மனிதனின் இயற்கை என்றால், தன் வாழ்வில் இன்பம் பெற அவன் செய்யும் செயல்கள் என்ன? ஏனென்றால், அவன் செயல்களின் அடிப்படை உணர்வு இன்பம் பெறுவது என்றாலும் அவனுக்கு கிடைப்பது துன்பம்தான் இருந்தும் அவன் திரும்பத்திரும்ப அவைகளையே செய்து துன்பம் அடைகிறான். விரும்புவது இன்பத்தை; ஆனால், அடைவது துன்பம்தான். இதுதான் இவ்வுலகின் நியதி. உலகம், அதன் விருப்பப்படி நாம் நடந்தால் இன்பம் கிடைக்கும் என்று வாக்குறுதி அளிக்கிறது. ஆனால், இந்த உலகம் என்ன அளிக்கிறது? துன்பம்; துன்பம் மட்டுமே! ஆனால், இங்கே பேசப்படுவது உண்மை இன்பம் பற்றி; நிலையற்ற இன்பம் அல்ல; நிரந்தரமானது; வெளி சூழ்நிலைகளால் பாதிப்படையாத இன்பம். அது எப்படிக் கிடைக்கும்? நம் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும் அந்த உண்மை இன்பம் எங்குள்ளது?

இவ்வுலகில் ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் இன்ப - துன்பங்கள் உண்டு. துன்பங்கள் இருந்தும், அமங்களமான விஷயங்களிலிருந்தும் ஒவ்வொரு மனிதனும் விலகி இருக்கவே விரும்புகிறான். துன்பம் விளைவிக்கும் விஷயங்களிலிருந்து மனிதன் விலகி இருக்க விரும்புவதன் காரணம் என்ன, என்று சிந்தியுங்கள். துன்பங்கள், அமங்களமான விஷயங்களிலிருந்து தப்பும் வழிகளைத் தேடி நாம் பல இடங்களுக்கும் செல்கிறோம் பல மதங்களையும் பின்பற்றுகிறோம், கடவுளிடம் எப்பொழுதும் வேண்டிக்கொள்கிறோம். பஜனைகளும் பூஜைகளும் செய்கிறோம். கடவுள்மேல் நம்பிக்கை வைக்காத பலர் தங்கள் உத்தியோகங்களையே முழுமையாக நம்பி வருங்காலத்தில் எந்தத் துன்பமும் நேராமல் வாழப் போதுமான அளவு செல்வம் சம்பாதிக்க விரும்புகிறார்கள். துன்பம் இல்லாமல் இருப்பதே இன்பம் என்று நாம் நினைக்கிறோம். துன்பம் நேரிடாமல் இருந்தால்தான் இன்பம் சாத்தியம் என்று நாம் நினைக்கிறோம். இன்பம் எது என்று நமக்குத் தெரியவில்லை. துன்பம் அளிக்கும் விஷயங்கள் இல்லாத பொழுது நாம் நம்மை இன்பம் அடைந்தவராக எண்ணுகிறோம் இதுதான் இன்பமா? உலகம் இப்படித்தான் நினைக்கிறது. நாம் கடவுளிடம் இதைத்தான் வேண்டிக்கொள்கிறோம்.

ஒரு உதாரணம் - ஒரு கிராமத்தில் ஏழை ஒருவன் இருந்தான். தன் ஏழ்மையிலிருந்து விடுதலை பெற அவன் இரவு – பகல் கடவுளிடம் பக்தி செய்து வந்தான். அவன் வேண்டுதலை செவிமடத்த கடவுள் ஒருநாள் அவன் முன் தோன்றி அவன் விருப்பம் என்ன, என்று கேட்டார். அவன் மிகுந்த வினயத்துடன் “உங்கள் கருணையால் எனக்கு தரிசனம் அழித்துள்ளீர். ஏன் விருப்பம் எனக்கு ஒரு நல்ல உத்தியோகம் கிடைக்க வேண்டும்,” என்றான். கடவுளும், “அப்படியே நடக்கட்டும்” என்றார். அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்தது. சில வருடங்கள் கழிந்தன. ஒரு நாள் அவன் திரும்பக் கடவுளிடம் வேண்டினான் கடவுள் எதிரே தோன்றி என்ன வேண்டும், என்று கேட்டார். “கடவுளே! இந்த சிறிய குடிசையில் வாழ்வது சிரமமாக இருக்கிறது. பெரிய வீடாக இருந்தால் நன்றாக இருக்கும்” என்றான். கடவுள் “சரி உன் வீடும் பெரிதாக இருக்கும்” என்றார். மெள்ள வருடங்கள் உருண்டோடின; அவன் அந்தப் பெரிய வீட்டிலும் திருப்தியாக இல்லை. கடவுளை வேண்டினான். மறுபடியும் கடவுள் தோன்றி “இப்பொழுது உன் ஆசை என்ன?” என்றார். அவன் கூறினான் “சொல்லப் போனால் வீட்டில் ஒரு துன்பமும் இல்லை. தனியாக மனம் லயிக்கவில்லை. ஒரு அழகான குணவதியான பெண்ணுடன் திருமணம் செய்வித்தீர்களானால் என் வாழ்வு வழம் பெற்றுவிடும்.” கடவுள், “அப்படியே ஆகக் கடவது! உன் இந்த ஆசையும் பூர்த்தியாகும்” என்றார்.

திருமணத்திற்குப் பிறகு ஆனந்தமாக நாட்கள் கழிந்தன. சில வருடங்களுக்கு பிறகு அந்த மனிதன் திரும்பக் கடவுளிடம் குழந்தைக்காக வேண்டினான். கடவுள் அருளால் அவன் வீட்டில் குழந்தைகளின் சிரிப்பொலி எதிரொலிக்கத் தொடங்கியது. இப்படியே வருடங்கள் பல கழிந்தன. இப்பொழுது அவன் வீடு, அவன் குடும்பத்தார்களுக்கு போதுமானதாக இல்லை. கவலையுடன் அவன் கடவுளிடம் வேண்டினான், “ஏ! கடவுளே, என் குடும்பத்தாருக்கு நான் எந்த இன்பமும் கொடுக்க முடியவில்லை. என் வீடு மேலும் பெரிதாகவும், வேலை, வியாபாரம் மேலும் உயர, குழந்தைகளின் திருமணங்களும் நல்ல படியாக நடந்தால், என்வாழ்வு பயனடைந்ததாக கருதுவேன்” என்றான். கடவுளும் “உன் ஆசைப்படி ஆகும்” என்றார்.


அந்த மனிதன் கடவுளிடம் கேட்டதெல்லாம் உகந்த காலத்தில் அவனுக்கு கிடைத்தன. இப்பொழுது அவன் வாழ்க்கையில் கடைசிக்கட்டத்திற்கு வந்துவிட்டான். குழந்தைகளுக்குத் திருமணமாகி பேரன் பேத்திகளும் இருக்கிறார்கள். முதிர்ந்த வயது, பற்கள் உதிர்ந்துவிட்டன, முதுகும் கூனிப்போய்விட்டது, கண்கள் தெரியவில்லை, காது கேட்காத நிலையில் துக்கத்துடன் இருப்பதைக் கண்டு திரும்பக் கடவுள் அவன் முன் தோன்றி இப்பொழுது அவன் நிலையைப் பற்றி விசாரித்தார்.

அவன் கூறினான், “கடவுளே, நாட்கள் எப்படிக் கழிந்தன என்ற விபரமே தெரியவில்லை. ஏல்லாம் கிடைத்தும், ஒரு குறையை உணர்கிறேன். சாந்தி இல்லாமல் எல்லாமே வீண்தான் என்பதை உணர்கிறேன். ஏனக்கு இப்பொழுது ஒரே ஒரு விருப்பம்தான். எனக்கு சாந்தி வேண்டும். இவ்வளவு வாய்ப்புக்கள் கிடைத்தும், நான் உலக இன்பங்களையே யாசித்து வந்தேன். இன்று நான் உணர்ந்தேன் - முதலியேயும், கடைசியிலும் எனக்குத்தேவை சாந்திதான். கடவுள் கூறினார், “உன் வாழ்வில் நீ மற்ற எல்லாத் தேவைகளையும் புரிந்துகொண்டாய். ஆனால், சாந்தியின் அவசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. நீ முதலிலேயே சாந்தியைக் கேட்டிருந்தால் அப்பொழுதே உனக்கு அளித்திருப்பேன். உன் வாழ்வில் குறை தோன்றி இருக்காது. மற்றப் பொருள்கள் மூலம் சாந்தி கிடைக்கும் என்று எண்ணியபடி இருந்தாய். இவைகளால் சாந்தி கிடைக்காது.

நாம் நம் வாழ்வில் நிட்சயமாக சாந்தியை விரும்புகிறோம். ஆனால், எல்லா வேலைகளும் வெற்றியடைந்தால் நமக்கு சாந்தி கிடைத்துவிடும் என்று எண்ணுகிறோம். ஆனால் உண்மையான இன்பம், சாந்தி, பேரானந்தம் இந்தப் பொருள்களை சார்ந்தது அல்ல உண்மையான இன்பம், சாந்தி வெளியில் இல்லை படைப்பாளர் மனிதனுள் இன்பத்துக்கும், சாந்திக்கும் ஒரு தாகத்தை உண்டாக்கியுள்ளார் என்றால், அந்த இன்பம், சாந்தியும் மனிதனிடம் இருந்து தொலைவில் இல்லை. அவன் அருகில் இருக்கிறது. அதை வெளியே தேட அவசியம் இல்லை. கேள்வி இதுதான் - ஆனாலும், மனிதன் ஏன் துக்கத்துடன் இருக்கிறான். உண்மை இன்பமும், சாந்தியும் உங்களுள் இருக்க அதைப் பெறுவது எப்படி?



Vishnu Arulsundram



Samy Appathurai



Dr Balasundram



Lawyer Kanaka Manoharan



Navatkudah E.Thangarajah



Chandra Selvarajahgopal



People

ஈழத்துப்பூராடனாரின் **"வல்வெட்டித்துறைக் கடலோடிகள்"** புத்தக வெளியீட்டு விழா அண்மையில் ரொரண்டோவில் நடைபெற்றது அதில் கலந்து கொண்ட அதிதிகளையும் மக்கள் கூட்டத்தினரையும் படங்களில் காணலாம்.